12498



4917
XXV.B.5

# ந்தியும் ஜவஹரும்

வெ. சாமிநாத சர்மா.

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

[1963]

காந்தியடிகளையும் ஜவஹர்லால் நேருவையும் இரண்டு தராசுகளில் வைத்துக் காட்டுகிற இந்த நூலில், இருவருக்குமிடையேயுள்ள ஒற்றுமையான அம்சங்களென்னென்ன, ஒருவரையொருவர் எந்தக் கண்கொண்டு நோக்குகின்றார்கள் என்பன போன்ற பல விஷயங்களும் ஆராயப்படுகின்றன.

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—35

# காந்தியும் ஜவஹரும்

எழுதியது :

வெ. சாமிநாத சர்மா

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

(தொடக்கம் 1936)

புதுக்கோட்டை

ஆறும் பதிப்பு : ஜூன், 1963
பதிப்பு உரிமை பெற்றது.

விலை : 75 ந. பை.

Printed at Jeevan Press, Madras-5. (748)

# பொருளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| | பிரசுராலயத்தின் வார்த்தை | 4 |
| 1. | இருவரும் வாழ்க ! | 5 |
| 2. | சில ஒற்றுமைகள் | 10 |
| 3. | சில வேற்றுமைகள் | 23 |
| 4. | மகாத்மா | 36 |
| 5. | ராஷ்ட்ரபதி | 42 |
| 6. | ஜவஹர் | 45 |

# பிரசுராலயத்தின் வார்த்தை

இந்நூலில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் முதல்வரான காந்தியடிகள் அமரராகிவிட்டார். ஆயினும் அவர் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறாரென்பதை, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் உணர்ந்து வருகிறோம். எனவே அவரை இன்றைய ஒருவராக இந்நூலின் இந்த ஆறாம் பதிப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதை அன்பர்கள் வரவேற்பார்களென்று நம்புகிறோம். இந்தப் பதிப்பில், கருத்துப் பிறழாவண்ணம் சில சொற்கள் மாற்றப்பட்டிருக்கின்றன.

இந்நூலாசிரியர், இரங்கூனில் வெளியிட்டு வந்த ஜோதி பத்திரிகையின் 1938-ஆம் ஆண்டு ஜுலை மாத இதழில் எழுதப் பெற்ற ஒரு கட்டுரையைக் கடைசியில் சேர்த்திருக்கிறோம்.


பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்




காந்தியும்



காந்தியும்



ஜவஹரும்



ஜவஹரும்

# காந்தியும் ஜவஹரும்

## 1. இருவரும் வாழ்க !

கீதையை அருளிய கண்ணனுகக் காந்தியடிகளை நாம் கற்பனை செய்து கொண்டோமானுல், அர்ஜுனன் வடிவமாக ஜவஹர் நமது மனக்கண் முன்னர் உடனே தோன்றி விடுகிருர். வெண்ணெய் திருடி ஆய்ச்சியரை வேடிக்கை காட்டிய கிருஷ்ணனையோ, கள்ள மணம் புரிந்த பார்த்தனையோ நாம் இங்குக் குறிப்பிடுகிருேமில்லை. சில காலம் வரை, அதாவது நமது தேசம் சுதந்திரம் அடையும் வரை, இவர்களை மறந்து விட்டால் கூட நல்லதுதான். நாடு கொள்ள வேண்டுமென்ற ஆசை நோய் பற்றி, சுயநலப் புழுவினுல் அரிக்கப்பெற்று, ஆங்காங்கு ரத்தக் கறை படிந்திருந்த பாரத சமுதாயத்தைச் சத்தியத்தினுலும், தர்மத்தினுலும், தியாக சிந்தனையினுலும் தட்டி எழுப்பிய கர்ம வீரர்களல்லவா கிருஷ்ணுர்ஜுனர்கள்? கிருஷ்ணனுடைய சங்க நாதத்தையும் அர்ஜுனனுடைய காண்டீபத்தின் நாணெலியையும் நாம் கேட்க மறந்துவிட்டோம். அதற்குப் பதிலாக அவர்களைப் படத்திலே, கற்சிலையிலே ஏற்றி தூபதீபங் காட்டித் திருப்தியடைந்து விடுகிருேம். அவர்களுடைய வீர உணர்ச்சியை நமது ரத்தத்திலே பாய்ச்ச முற்படுகிருேமில்லை. வீழ்ச்சி ஏற்பட்டு விட்டதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

கடைசி வரை சமாதானத்தை நாடுவோம், ஒத்துழைத்துப் பார்ப்போம் என்ற கருத்துக் கொண்டே

கௌரவரிடம் தூது நடந்தான் கண்ணபிரான், முணு முணுத்தான் பாண்டவ வீரன். காந்தி-இர்வின் ஒப்பந்த காலத்தில் இந்தக் காட்சியை அப்படியே கண்டோமில்லையா? காந்தி-இர்வின் சம்பாஷணையைக் கேட்ட செவிகள் ஜவஹரின் முணு முணுப்பையும் கேட்டன. கண்ணபிரானின் அருள் வலி முன்னர், அர்ஜுனனின் புயவலி பணிந்து நின்றது. காந்தியடிகளின் ஆன்ம சக்தி முன்னர் ஜவஹரின் வீரம் வணக்கம் செலுத்தியது; ஆனால் முணு முணுப்புடன் தான். கண்ணனின் இனிய தோழன் காண்டீபன். காந்தியடிகளின் கண்ணிலும் இனியவன் ஜவஹர்.

இருவருக்குமுள்ள தொடர்பு சொல்ல முடியாதது; ஆனால் கண்டனுபவிக்கக் கூடியது. கருத்தொருமித்த காதலரிடையே சில சமயங்களில் ஊடல் நிகழ்ந்த போதிலும், இருவர் மனமும் எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கிறதல்லவா? இந்தச் சம்பாஷணையை அனுபவிக்கத்தான் முடியுமே தவிர, பிறருக்கு எடுத்துச் சொல்ல முடியாது. அது போன்றதுதான் காந்தி—ஜவஹர் உறவும்.

காந்தியடிகள் எங்கே செல்கிறார், எந்த லட்சியத்தை நாடிச் செல்கிறார் என்பது ஜவஹருக்குச் சில சமயங்களில் தெரிவதில்லை. ஆனால் அவரைப் பின்பற்றிச் செல்வதிலே அபார நம்பிக்கை இருக்கிறது. லட்சியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல். அந்த ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ளாமலே அந்த லட்சியத்தை நாடிச் செல்லுதல். இதற்கு எத்தகைய மனோ உறுதியும், தியாக புத்தியும் வேண்டும் தெரியுமா? "பதினைந்து வருஷங்களாக நான் தங்களிடம் நெருங்கிப் பழகிக் கொண்டு வந்த போதிலும், என்னால் அறியக்கூடாத ஒரு தன்மை—அல்லது சக்தி—தங்களிடம் மறைந்திருக்கிறது. அதை நினைக்க என்க்கு அச்சமாயிருக்கிறது" என்று காந்தியை

பார்த்து ஜவஹர் ஓரிடத்திலே குறிப்பிடுகிருர். "காந்தியின் தத்துவங்கள் பலருக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனல் அவரைப் பின்பற்றுதல் எல்லோராலும் முடியும்'' என்று பிறிதோரிடத்தில் கூறுகிருர். கிருஷ்ணன் —அர்ஜுனன் சம்பாஷணைகளில் இந்தக் கருத்துக்கள் தொனிக்கவில்லையா?

காந்தி ஒரு வித்து. அதிலிருந்து தோன்றிய முளை ஜவஹர். காந்தியின்றேல் ஜவஹர் எங்கே? ஜவஹர் தோன்ரு விட்டால், காந்திக்குத்தான் என்ன பெருமை? வித்து, மண்ணிலே இருக்கிறது, அதில் வாழ்க்கையையும் காண்கிறது; தன்னினின்றும் பிறந்த மரத்துக்கும் வாழ்வை நல்கி இன்பம் நுகர்கிறது. வித்தினின்று உண்டான முளையோ, அதனின்று வேறுபடாததாய், ஆனல் அதைக் காட்டிலும் பெரிதாய் வானுற ஓங்கி வளர்ந்து, இருக்க நிழலும், உண்பதற்குப் பழங்களும் அளிக்கிறது. வித்து பெரிதா? மரம் பெரிதா? இந்தக் கேள்வியே தவறு. காந்தியடிகள் மண்ணில் வேலை செய்யும் விவசாயியாக, ஏழை மக்களிலே ஒருவராக இருக்கிருர். அவர்களுடைய ஆசாபாசங்களின் பிரதி பிம்பமாக, சுக துக்கங்களின் வடிவமாக, வாழ்வு தாழ்வுகளின் பிரதிநிதியாக அவர் விளங்குகிருர். தம்மை ஒரு விவசாயி என்று அவர் சொல்லிக்கொள்வதன் ரகசியமும் இதுதான். காந்தி வேறு, இந்தியா வேறு என்று பிரிக்க முடியாது. காந்தியின் அபிலாஷை இந்தியாவின் அபிலாஷை. காந்தியின் உணர்ச்சி இந்தியாவின் உணர்ச்சி. பொதுவாகச் சொல்லும்போது, காந்தி, இந்தியாவின் கண்ணுடி; இந்தியாவின் நாடி ஓட்டத்தை அளந்து கூறும் கருவி.

காந்தி வித்தினின்று தோன்றி விருட்சமாக வளர்ந்த ஜவஹர், பாமர ஜனங்களிடத்திலிருந்து வேறுபட்டவராயிருந்து கொண்டு அவர்களிடத்தில் அன்பு காட்டுகிருர்; அவர்களுக்கு இடமும் உணவும் வழங்க

முயல்கிருர்; அதிலே பெருமையும் கொள்கிருர். பாமர ஜனங்களின் உள்ளத்திலே ஒரு சக்தி பொருந்திய மூர்த்தியாகக் கோயில் கொண்டிருக்கிருர்.

காந்தி, நீறுபூத்த நெருப்பு. அதிலே கொழுந்து விட்டெரியும் ஜ்வாலை ஜவஹர். காந்தியடிகளின் எஃகு போன்ற மனே உறுதியை, ஆளை மயக்கும் ஒரு வித புன்சிரிப்பு கவிந்து கொண்டிருக்கிறது. அவருடைய அன்பான வார்த்தைகளிலே அதிகார தோரணை அடங்கியிருக்கிறது. அவருடைய அடக்கத்திலே எதற்கும் அஞ்சாத வீரம் அடைக்கலம் புகுந்து கொண்டிருக்கிறது. சத்துருக்களின் கோபாவேச மெல்லாம், அவருடைய பணிவிலே கரைந்து விடுவதை எத்தனை முறை நாம் பார்த்திருக்கிருேம்? இந்த நீறுபூத்த நெருப்புத் தன்மையே இந்தியாவின் நாகரிகம். இதனுலேயே காந்தியடிகள் இந்தியாவாகப் பிரதிபலிக்கிருர். உலகம் அவரை இந்தியாவாகக் கருதுகிறது.

ஜவஹர் ஜ்வாலை, எட்டி நின்றேர்க்கு வெளிச்சம் கொடுக்கிறது; கிட்டச் சென்று தட்டிப் பார்ப் போரைச் சுட்டு விடுகிறது. இந்த ஜ்வாலையின் வெளிச்சத்தினுல் நமக்குத் தெரியாத வழிகளெல்லாம் தெரிகின்றன. அவைகளூடே செல்ல வேண்டு மென்ற தைரியம் நமக்கு உண்டாகிறது. நமது தேசத்தின் தாழ்ந்த நிலையை இந்த ஜ்வாலை கொண்டு பார்க்கிருேம். நம்மிடத்திலே ஊறிக் கிடக்கும் கோழைத் தனத்தை இந்த ஜ்வாலை சுட்டெரிக்கிறது. உலகம் இப்பொழுது இந்த ஜ்வாலையின் பிரகாசத்தைக் கொண்டு இந்தியாவைப் பார்க்கத் தொடங்கியிருக்கிறது. நெருப்பினின்று பிறந்த ஜ்வாலைக்குப் பெருமையா? ஜ்வாலையை உண்டாக்கிய நெருப்புக்குப் பெருமையா?

பண்டித மோதிலால் நேரு திரட்டி வைத்த ஏக புத்திரனை தங்கக் கட்டியை, காந்தி என்னும் பொற்

கொல்லன், தியாகம் என்னும் தீயிலே வைத்து உருக்கி, ஜவஹர் என்னும் ஆபரணமாகச் செய்து பாரத மாதாவுக்குச் சூட்டி விட்டான். தாய்க்கு அணி பூட்டிய பொற்கொல்லனுக்குப் பெருமையா? அல்லது அணியாக அமைந்த பொன்னுக்குப் பெருமையா? காந்தி வாழ்க! ஏன்? ஜவஹரை வாழ்விக்க. இருவரும் வாழ்க! ஏன்? இந்தியா வாழவேண்டுமல்லவா?

## 2. சில ஒற்றுமைகள்

காந்தி ஒரு லட்சிய புருஷர். ஜவஹரும் அப்படித் தான். உலகத்தில் இந்தியாவின் ஸ்தானம் எங்கே என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டுதான் இருவரும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். இந்தியாவின் பரம்பரைப் பெருமையை இருவரும் நன்கு உணர்ந்தவர்களாதலால், தற்போதைய வீழ்ச்சியை இவர்களால் நன்கு உணர்ந்துகொள்ள முடிந்தது. இதனாலேயே, இந்தியாவின் வருங்காலம் எப்படியிருக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்கும் சக்தி இவர்களுக்கு உண்டாயிற்று. எவனொருவன் இறந்த காலத்தை அறிந்திருக்கிறானோ அவன்தான் நிகழ்காலத்தில் வாழ முடியும்; எதிர்காலத்தையும் தரிசனம் செய்ய முடியும். இஃது இயற்கை நியதியல்லவா? காந்தி ஓரிடத்திலே கூறுகிறார்:—"உலகத்தாருடைய நன்மைக்காக உயிர் விடுவதற்கு முன்னர், உலகத்தாருடைய நன்மையை முன்னிட்டு உயிர்வாழவும் இந்தியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்." இந்தியாவின் பழைய நூல்கள், மற்றச் சரித்திர சம்பவங்கள் முதலியன இந்தத் தத்துவத்தை வலியுறுத்தியே பேசுகின்றன இதன் செயல் வடிவினராகவே காந்தியும் ஜவஹரும் இருக்கிறார்கள்.

இரண்டு தலைவர்களும், நியாயவாதிகளாகவே தங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். ஆனால் இருவருக்கும் ஆரம்பத்திலேயே இந்தத் தொழிலில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. இந்த வெறுப்பு, தேசத்தின் மீது கொண்ட அபிமானமாக மாறியது. காந்தி, தென்னாப்ரிக்காவில் வக்கீல் தொழிலை நடத்திக்கொண்டிருந்த போது, ஒரு கட்சிக்காரரின் சார்பாக ஆஜராக வேண்டியிருந்தது. அந்தக் கட்சிக்காரருடைய வழக்கில் சில தவறுகள் இருக்கின்றனவென்று, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இவருக்குத் தெரிந்தது.

உடனே அத்தவறுகளைக் கோர்ட்டாருக்கு இவரே தெரிவித்து விட்டார். இவருக்குச் சாதகமாக வழக்கு வெற்றி பெற்றது!

பண்டித ஜவஹர்லால் நேரு 1912-ஆம் வருஷம் வக்கீல் தொழிலை ஆரம்பித்தபோது, அஃது எவ்வித உற்சாகத்தையும் தமக்குக் கொடுக்கவில்லையென்று கூறுகிறார். ஒரு சமயம், கல்கத்தாவின் பிரபல நியாயவாதியும் 1908-ஆம் வருஷத்துச் சென்னைக் காங்கிரஸ் தலைவராயுமிருந்த ஸர் ராஷ்விகாரி கோஷ், ஜவஹர்லாலிடம் அன்பு பூண்டு, வக்கீல் தொழிலில் மேன்மையடைவதற்கான சில வழிகளைச் சொன்னார். சிறப்பாக, சட்ட சம்பந்தமாக ஒரு நூல் எழுதினால், அது நல்ல பழக்கமாயிருக்கும் என்றும், அதற்கு வேண்டிய உதவிகளைத் தாம் செய்வதாகவும் கூறினார். ஆனால் பண்டிதருக்கு அதில் விருப்பமே இல்லை. சட்ட சம்பந்தமான நூல்களை எழுதுவது, காலத்தையும் உழைப்பையும் வீணாக்குவதாகுமென்று கருதினார். ஜவஹர் எப்பொழுதும் தமது பேச்சுக்களிலாகட்டும், எழுத்துக்களிலாகட்டும், வக்கீல மனப்பான்மையைக் கண்டித்தே வந்திருக்கிறார்

மற்றொரு விநோதமான ஒற்றுமையும் காந்தியினிடத்திலும் ஜவஹரிடத்திலும காணப்படுகிறது. இருவரும் சட்ட நிபுணர்கள். ஆனால் இருவரும் சட்டத்தை மீறியிருக்கிறார்கள். அதற்காகப் பல கஷ்டங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். மனிதனிடத்திலே யுள்ள மனிதத் தன்மையை வளர்ப்பதற்குச் சட்டம் ஒரு துணைக்கருவியாக இருக்கவேண்டும். அதற்கு மாறாக அந்தத் தன்மையை நசுக்குவதற்கு ஒரு சட்டம் முற்படுமானால் அது சட்டமாகாதென்பது இவர்கள் கருத்து. வாழ்க்கைக்காகச் சட்டமே தவிர, சட்டத்திற்காக வாழ்க்கையல்லவே. சரித்திர புருஷர்கள் பலரும், மனிதனுடைய ஜீவாதாரமான உரிமைகளைக் காப்பாற்

றுவதற்காகச் சட்டங்களை மீறியிருக்கிறார்கள். காந்தியும் ஜவஹரும் சரித்திர புருஷர்களல்லவோ?

இரண்டு தலைவர்களும், தியாகத்திற்காகத் தங்கள் தேகத்தை நன்கு பக்குவப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அப்படியேதான் மனத்தையும். இதற்கிசைந்தாற் போலவே, இவர்களுடைய பாலிய வாழ்க்கையும் அமைந்திருப்பதைக் காண நமக்கு மிக ஆச்சரியமாயிருக்கிறது இவர்களுடைய தாய்மார்களை இந்தச் சமயத்தில் நினைவுபடுத்திக் கொள்ளாமலிருக்க முடியாது. காந்தி, பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்க லண்டனுக்குச் சென்றபோது, இவருடைய தாயார்—புத்திரிபாய் அம்மையார்—தமது மகனிடத்தில் மூன்று உறுதி மொழிகள் வாங்கிக்கொண்டார். இந்த மூன்று உறுதி மொழிகளுந்தான், காந்தியின் பிற்காலப் பெருமைக்குச் சோபானங்களாயமைந்தன. இவருடைய உடலும் உள்ளமும் ஒழுங்கான வளர்ச்சியடைய வேண்டுமென்பதில் புத்திரிபாய் கண்ணுங் கருத்துமாயிருந்தார்.

ஜவஹரின் வாழ்க்கையமைப்பில், இவருடைய தாயாரின் பங்கு என்னவென்பதை நிர்ணயித்துக் கூற முடியவில்லையாயினும், தகப்பனருடைய தொடர்பைக் காட்டிலும் தாயாரின் தொடர்பு இவருக்கு அதிகமாயிருந்ததென்று நன்கு தெரிகிறது. இஃதொன்றே போதுமானதல்லவா? "கனவிலே கூட தகப்பனரிடத்தில் கூற முடியாத விஷயங்களையெல்லாம் தாயாரிடத்தில் நான் தாராளமாகச் சொல்வேன்" என்கிறார் ஜவஹர். பிற்காலத்திலேகூட—அதாவது ஜவஹர் பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு ஒரு தலைவராக வந்த பிறகு கூட—தாயார் என்றால் தனி மதிப்பு வைத்துத்தான் நடந்துகொண்டு வந்திருக்கிறார். ஆம்; ஸ்வரூபராணி நேருவின்—தாயார் பெயர்—வாழ்க்கையெல்லாம் இந்த ஒரு மகனுடைய பெருமையிலன்றோ நிற்கிறது. இதற்குத் தகுந்தபடி மகனும் நடந்துகொள்ளக் கடமைப்பட்

டிருக்கிறாரல்லவா? ஜவஹரின் தியாகமும் சிறைவாச முந்தான், ஸ்வரூபராணியின் உள்ளத்தை உருக்கித் தேசத் தொண்டில் ஈடுபடச் செய்தன. தமது தள்ளாத வயதில், அருமைக் கணவரை இழந்துவிட்ட பிறகுகூட, தொண்டா படையிலே சேர்ந்து மறியல் செய்திருக்கிறார்; தடியடிபட்டிருக்கிறார். எல்லாம் தேசத்திற்காக. இளமையில் தாய்மார்கள் செய்து வைக்கிற பழக்கம், பிள்ளைகளின் பிற்காலப் பொதுநல வாழ்க்கையில் ஆழ்ந்த முத்திரையிட்டு விடுவதை காந்தியிடத்திலும் ஜவஹரிடத்திலும் நன்றாகக் காண்கிறோம்.

காந்தியும் ஜவஹரும், உடலை உள்ளத்திற்கும், உள்ளத்தைத் தங்களுக்கும் அடிமைப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனாலேயே இவர்களிடத்தில் செயலாற்றுந் திறன் அதிகமாகக் காணப்படுகிறது. ஒரு தலைவனுக்கு முக்கியமாக அமைந்திருக்க வேண்டிய லட்சணம் இதுதான். சிறைவாசம் இவர்களுடைய தேகத்தையோ, மனத்தையோ சிறிதுகூட அசைத்துக்கொடுப்பதில்லை. அதற்கு மாறாக, சிறையில் இவர்கள் நிம்மதியைக் காண்கிறார்கள். இந்தக் காலத்தில்தான் இவர்களுடைய தனித்த அறிவும் ஆற்றலும் உலகத்திற்கு உபகாரமாய் வெளிப்படுகின்றன. காந்தியடிகள் சிறையிலிருந்தபோது கீதைக்கு வியாக்கியானம் எழுதினார்; இன்னும் பல உபதேச மொழிகளை வெளியிட்டார். ஜவஹரும் அப்படித்தான். 'உலக சரித்திர'த்தையும், 'சுய சரித்திர'த்தையும் எழுதியது சிறையில் தானே? லோகமான்ய திலகர், சிறையிலிருந்து கொண்டுதான் கீதாரகசியம் எழுதினாரென்பதையும், சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரியில் அஞ்ஞாதவாசம் செய்துகொண்டிருந்த காலத்தில்தான் புதுமையான கவிதைகள் பல எழுந்தன வென்பதையும் நினைத்துப் பார்க்கிறபோது, இத்தகைய தலைவர்களை அடிக்கடி சிறைக்கு அனுப்புவதன்மூலம் அரசாங்கத்தார் நமக்கு

ஒரு விதத்தில் நன்மையையே செய்கின்றனர் என்று ஆறுதல் கொள்ள முடிகிறதல்லவா ?

இங்ஙனம் இவர்கள் மனத்தைத் தங்கள் வசப் படுத்திக் கொண்டிருப்பதனால்தான், எத்தகைய துக்கம் ஏற்பட்ட போதிலும் அதில் சிறிதுகூடச் சோர்வு கொள்ளாமலிருக்கிறார்கள். காந்தி, பாரிஸ்டர் பரீட்சை யில் தேறிவிட்டு இந்தியாவுக்குத் திரும்பிவந்தபோது இவருடைய தாயார் இறந்துவிட்டிருந்தார். இந்தச் செய்தியை மெதுவாக இவருக்குத் தெரிவித்தாகள். "ஆனால் நான் இதுபற்றி அழுது புலம்பத் தொடங்க வில்லை. கண்ணீரைக்கூடத் தடுத்து நிறுத்திவிட என்னால் முடிந்தது. ஒன்றும் நிகழாதது போலவே வாழ்க்கையில் இறங்க ஆரம்பித்தேன்" என்று தம் அனுபவத்தை காந்தி கூறுகிறார். இந்த அனுபவத்தை நேரில் பாராதவர்கள் இருக்கலாம். ஆனால் இப்பொழுது, ஜவஹரின் சலியாத மனோ உறு தியைக் கண்கூடாகப் பார்க்கிறோம். மனைவியை யிழந்து, மகளைத் தனியே விட்டு விட்டு, தாய்நாட்டு மண்ணை மிதித்ததும், தேசத்தொண்டிலே எவ்வளவு தீவிரமாக ஈடுபட்டார் ? கண்ணீர் விட்டுக் கலங்கிக் கொண்டிருந்தாரா ? தம்முடைய சொந்தத் துக்கங்களை யெல்லாம், தேசமக்களின் துயரத்திலே கலக்க விட்டு விட்டார்.

மனத்தைத் தான் இவர்கள் இப்படி வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இவர்கள் தேகம் இவர் கள் சொல்கிறபடி உழைக்கவும், துன்பங்களைச் சகித் துக் கொள்ளவும் தயாராயிருக்கிறதென்பதைச் சில உதாரணங்களைக் கொண்டு தெரிவிப்போம். மகாத்மா காந்தி 1924-ஆம் வருஷம் 'அப்பெண்டிஸைடிஸ்' என்ற குடல் நோயினால் அவஸ்தைப்பட்டு 'ஆபரேஷன்' செய் யப்பட்டார் என்பது அன்பர்களுக்கு ஞாபகமிருக்கும். அந்தச் சமயம், 'குளோரோபாரம்' என்ற மயக்கமருந்து

கொடுக்கப்படாமலே காந்திக்கு 'ஆபரேஷன்' செய்யப் பட்டது. பின்னர்கூட, இவர் இந்த நோய் காரணமாக உரத்துச் சப்தம் போட்டது கிடையாது. உடல் நோயை மறந்தே இவர் இருந்தார். கடவுள் அருள் பெற்ற அடியார்களுக்குத்தான் இந்த நிலை ஏற்படு வதுண்டு. இது தவிர, காந்தியடிகள், தென்னுப்பிரிக் காவிலாகட்டும், இந்தியாவிலாகட்டும், எத்தனையோ முறை சிறை புகுந்திருக்கிருர்; சிறையில் எத்தனையோ விதமான கஷ்டங்களை அனுபவித்திருக்கிருர்; தனி மனிதர்களின் அடி உதைகளையும் பட்டிருக்கிருர் இவற்றிற்கெல்லாம் இவருடைய தேகம் ஈடு கொடுத் துக்கொண்டு வந்திருக்கிறது. காந்தியடிகள் விரும் பிய போது தூங்குவார். இத்தனை மணி நேரத்தில் எழுந்திருக்க வேண்டுமென்று சங்கற்பித்துக் கொண்டு படுத்தாராளுல் அதே மணி நேரத்தில் சரியாக எழுந்து விடுவார். இங்ஙனம் தேகத்தைத் தம் வசப்படுத்திக் கொண்டிருப்பதால்தான் இவரால் அதிகமாக உழைக்க முடிகிறது. அந்த உழைப்பிலே இவர் இளைப்பையும் காண்பதில்லை. உப்பு சத்தியாக்கிரகம் செய்வதற்காக இவர் தொண்டர் படையுடன் தண்டிக்கு நடந்து சென்று கொண்டிருந்த காலத்தில், இரவில் எல்லாரும் படுத்துறங்கும் போது, இவர் மட்டும் தனியாக, நிலவு வெளிச்சத்தில், தமக்கு வந்துள்ள கடிதங்களுக்குத் தாமே பதில் எழுதுவார். இத்தகைய உதாரணங்கள் பலவற்றை இன்னும் எடுத்துக் காட்டலாம்.

ஜவஹரும் இப்படித்தான். என்ன உழைப்பு! எத் தனை மைல் தூரம் சுற்றுப் பிரயாணம்! எத்தனை கூட் டங்களில் பேச்சு! எத்தனை பேருக்குப் பேட்டி! சிறிதே னும் சலிப்புக் கொள்வாரா? "இன்னும் ஏதேனும் நான் செய்ய வேண்டிய வேலையிருக்கிறதா?" என்ற கேள் வியை அடிக்கடி கேட்பார். இத்தகைய பெரிய பொறுப் புக்கும், சலியாத உழைப்புக்கும் தகுந்தபடியே இவர்

தமது தேகத்தை 1920-ஆம் வருஷத்திலிருந்தே பக்கு வப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார். அந்த வருஷத் தில், உத்தரப்பிரதேசத்திலுள்ள கிராமவாசிகளின் நிலை யைப்பற்றித் தெரிந்து கொள்ள இவர் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார். அப்பொழுது ஜூன் மாதம். நல்ல கோடை வெயில். இந்த வெயில் காலத்தில் இவர் மலைவாசம் செய்யச் செல்வது வழக் கம். அந்த வருஷம், தலைமீது ஒரு சிறிய துண்டைப் போட்டுக் கொணடு, கிராமங்களில் சுற்றித் திரிந்தார். கிராமவாசிகளின் வறுமையிலே, அந்த வறுமையிலே கூட அவர்கள் காட்டிய அன்பினிலே இவர் தம்மை மறந்து சுற்றுப் பிரயாணம் செய்தார். உண்மை இந் தியா எங்கே யிருக்கிற தென்பதை ஒருவாறு தெரிந்து கொண்டு அலகாபாத்திலுள்ள தமது ஆனந்த பவனத் திற்கு வந்தார். கண்ணாடியிலே முகத்தைப் பார்த்தார். ஒரே கருமை. திருப்தி கொண்டார். எந்தக் கஷ்டத் தையும் சமாளித்துக்கொள்ள, தம்தேகம் இடம் கொடுக் கும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். தேசப் பணிக்கு இது முதற்படி.

காந்தியும் ஜவஹரும், மேலைநாட்டிலே படித்தவர் கள். மேலைநாட்டு நாகரிகத்தை நன்றாக அறிந்து அனுபவித்தவர்கள். ஆனால் இந்திய நாகரிகத்தின் உண்மைப் பிரதிநிதிகளாக இப்பொழுது இருக்கிறார் கள். இஃது ஓர் ஆச்சரியம். இந்தியா பூரண சுதந்தி ரம் பெறவேண்டு மென்று இவர்கள் கொண்டிருக்கிற நோக்கங்கூட, இந்திய நாகரிகம் உலகெங்கும் பரவ வேண்டு மென்பதற்காகத்தான். உலகெலாம் இன்புற வேண்டு மென்பதன்றோ இநத நாகரிகத்தின் லட்சியம் ?

இந்த இரண்டு மகா புருஷர்களுடைய பொது வாழ்க்கையிலே, இவர்களுடைய மனைவிமார்களின்

பூரண ஒத்துழைப்பும் கலந்திருப்பதைக் காண்கிறோம். இந்திய நாகரிகத்தின் அழியாத சின்னம் இந்தக் குடும்ப ஒற்றுமைதான். கஸ்தூரிபாயும், கமலா நேருவும், தங்கள் கணவன்மார்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுவந்திருக்கிற மாற்றங்களுக்குச் சரியாகத் தங்களைச் சரிப்படுத்திக் கொண்டு வந்திருக்கிற அருமையை இந்திய நாட்டிலே தான் காண முடியும். இந்த இரண்டு தாய்மார்களும், தங்களை மாற்றிக்கொண்டதோடு நில்லாமல், கணவன்மார்களுடைய முன்னேற்றத்திற்கு எவ்வளவு உதவி செய்திருக்கிறார்கள்? எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள்?

காந்தியடிகளின் கீர்த்தி, இவ்வளவு உச்சநிலைக்கு வந்த தென்றால், அதற்கு, கஸ்தூரிபாய் என்ற திருவிளக்குதான் காரணம். இதை இவர், பல முறை தமது சுயசரிதத்தில் கூறியிருக்கிறார். இவர் தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கிய காலத்தில் பலர் சிறை புகுந்தனர். ஸ்திரீகள் பலரும் இதில் சேர்ந்தனர். அவர்களில் கஸ்தூரிபாய் அம்மையாரும் ஒருவர். அம்மையார், தாமே வலியச் சிறை சென்றது இங்குக் குறிப்பிடத்தக்கது. கணவனுருடைய வழியைப் பின்பற்ற வேண்டுமே என்ற கட்டாயத்திற்காகச் சிறை செல்லவில்லை. சிறை செல்லுமுன்னர் காந்தியடிகள் இவரைப் பன்முறை எச்சரிக்கை செய்தும் இருக்கிறார். "சிறைக் கொடுமைகள் தாங்காமல் மன்னிப்பு கேட்டுக்கொண்டு வெளியே வருவேனாகில் என்னைத் தாங்கள் அடியோடு திரஸ்கரித்து விடலாம். தாங்களும், தங்களுடைய குழந்தைகளும் துன்பங்களை அனுபவிக்கிறபோது நான் ஏன் அனுபவிக்கக் கூடாது? நான் எப்படியும் இந்தப் போராட்டத்தில் சேர்ந்தே தீருவேன்" என்று கஸ்தூரிபாய் அம்மையார் கூறிய வீரவாசகம், காந்தியடிகளின் புகழிலே என்றும் ஒலித்துக் கொண்டிருக்குமல்லவா?

ஜவஹரின் குடும்ப வாழ்க்கையைச் சிறிது கவனிப்போம். கமலாநேரு, ஜவஹரின் கைகளைப் பிடித்துக் கொண்டு எந்த வருஷம் சம்சார சாகரத்தில் இறங்கினுளோ, அந்த வருஷத்திலிருந்தே அந்தச் சாகரத்தில் கொந்தளிப்பு அதிகரிக்கத் தொடங்கியது. அதில் ஜவஹர் ஈடுபட்டு விட்டார். இதனுல் கமலா தனியே மிதக்க வேண்டியவளானுள். "எந்தச் சமயத்தில் என்னுடைய பூரண உதவியும் அவளுக்குத் தேவையாயிருந்ததோ, அந்தச் சமயத்தில்தான், அவளைப் புறக்கணிக்கும்படியான நிலைமையில் நான் பொது வாழ்வில் ஈடுபட்டு விட்டேன்" என்று ஜவஹர் குறிப்பிடுகிருர். அவள் தனியே மிதந்தாள். பொது வாழ்வில் தீவிரமாகக் கலந்து கொண்டாள். அதனுல் உண்டான துன்பங்களை அவள் பொருட்படுத்தவேயில்லை. அதற்குப் பதிலாக ஜவஹருக்குத் தன் சேவையினுல் பலங் கொடுத்து வந்தாள்; தைரியமூட்டி வந்தாள். தன் கணவன், தன்னைக் கவனிக்கவில்லையென்று அவள் வருந்தவேயில்லை. எவ்வளவுக் கெவ்வளவு ஜவஹர் அவளைக் கவனியாமலிருந்தாரோ அவ்வளவுக் கவ்வளவு அவளுடைய காதல் வளர்ந்தது. தன் கணவனிடத்தில் தேசத்தைக் கண்டாள். தேசத்திற்காகத் தன்னை அர்ப்பணம் செய்துவிட்ட புருஷனிடத்தில் தன்னை ஒப்புவித்தாள். இந்த நிலையிலேதான் இருவருக்கும் பரிசோதனை காலம் ஏற்பட்டது கணவன் ஒரு சிறையிலே; மனைவி மற்ருெரு சிறையிலே. ஆனுல் இருவருடைய மனமும் தேசத்தினிடத்திலே 1931-ஆம் வருஷம் நைனி சிறையிலிருந்து, ஜவஹர், தன் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் கூறுகிருர் :—"உன் தாயார் மலாக்கா சிறையிலிருந்து லட்சுமணபுரி சிறைக்கு மாற்றப் பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அஃது ஒரு விதத்தில் நல்லதுதான். ஏனென்ருல் அங்கே அவளுக்குப் பொழுதுபோகும்.

அவளுக்கு உடல் நலம் கெட்டிருப்பதாகத் தெரிந்து வருந்துகிறேன். அவளுக்கு ஒரு பெண் சிங்கத்தைப் போன்ற மனோ உறுதி உண்டு என்பதை நான் அறிவேன். ஆனால் உறுதியுள்ள அந்த உள்ளத்தை மூடிக்கொண்டிருக்கும் உடல், வலிவுள்ளதாக இருக்கவேண்டாமா ?''

மற்றொரு சமயம் எழுதுகிறார்:—"உன் தாயார் நான் இருக்கும் சிறைக்குக் கொண்டுவரப் பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டுச் சிறிது சந்தோஷப்படுகிறேன். அவள் அருகே யிருக்கிறாள் என்று தெரிந்தால் அதுவே ஓர் ஆறுதல் அல்லவா ? ஆனால் இருவருக்கும் மத்தியில் உயர்ந்த சிறைச்சாலைச் சுவர்கள் நிற்கின்றன ! எனவே அவள் எங்கிருந்தால்தானென்ன ?''

இந்தக் கடிதத்தை எழுதியபோது ஜவஹர், எத்தகைய நீண்ட பெருமூச்சு விட்டிருக்கவேண்டும் ? ஆனால் எல்லாம் தேசத்திற்காக !

1934-ஆம் வருஷம் கமலா படுத்த படுக்கையிலே கிடந்தாள். யமனோடு போராட்டம். இதனைக் கண்ட அரசாங்கத்தார் கருணை கூர்ந்து, டேராடூனில் வைக்கப் பட்டிருந்த ஜவஹரை, தற்காலிகமாக—ஆம்; பதினொரு நாட்களுக்குத்தான்—விடுதலை செய்தனர். அலகாபாத்திற்கு வந்தார் ஜவஹர். படுக்கையிலே துரும்பாய்க் கிடக்கிறாள் கமலா. பார்த்தார். எங்கே தம்மைவிட்டுப் பிரிந்துவிடப் போகிறாளோ என்று கலங்கினார்.

"பதினெட்டு வருஷ இல்லற வாழ்க்கை! ஆனால் இதில் எத்தனை நீண்ட வருஷங்களை நான் சிறைச்சாலையில் கழித்திருக்கிறேன் ! கமலா, ஆஸ்பத்திரிகளிலும் ஆரோக்கிய ஸ்தலங்களிலும் எவ்வளவு காலம் கழித்திருக்கிறாள் ! இப்பொழுதும் நான் சிறையிலேதான் இருக்கிறேன். சில நாட்களுக்குத்தான் வெளியே வந்திருக்கிறேன். கமலாவோ நோயாகப்படுத்துக் கொண்டிருக்கிறாள். அவள், தன் உடம்பைச் சரியாகப் பார்த்

துக் கொள்ளாததற்காகச் சிறிது வருத்தமே பட்டேன். ஆனால் அவள் மீது நான் எப்படிக் குற்றஞ் சொல்ல முடியும்? தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே யென்றும், தேசியப் போராட்டத்தில் தான் நியாய மாகக் கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுக்க இயல விலலையேயென்றும் அவளுடைய ஆத்மா துடி துடித் துக் கொண்டிருந்தது. இதனால் அவள் வேலையும் செய்யவில்லை; சிகிச்சையும் செய்து கொள்ளவில்லை. அவள் உள்ளத்திலே கொழுந்து விட்டெரிந்து கொண் டிருந்த தேசபக்தித் தீயே அவளைத் தின்று விட்டது. அவள் என்னை விட்டுப் பிரிந்துபோய் விடுவாளா? அவளுடைய தேவை அதிகமாக எனக்கு வேண்டி யிருக்கும் சமயத்தில் அவள் என்னை விட்டு அகன்று விடுவாளா? மாட்டாள். இப்பொழுதுதான் (பதினெட்டு வருஷங்கள் கழித்து) நாங்கள் ஒருவருக்கொருவர் நன்றாக அறிந்து கொண்டோம். நாங்கள் இருவரும் சேர்ந்து நடத்தும் வாழ்க்கை இனியே ஆரம்பமாகப் போகிறது. நாங்கள் ஒருவருக்கொருவரை அதிகமாக நம்பியிருந்தோம். இருவரும் சேர்ந்து செய்யவேண்டிய வேலைகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன."

ஐயோ! கமலா அகன்று விட்டாள். ஜவஹர் தன் னந் தனியராகத்தான் நிற்கிறார். எத்தனையோ தலை முறையாக வளர்ந்து வந்த நேரு வமிசக்கொடி வாடி வீழ்ந்துவிட்டது. அதில் அரும்பிய இந்திரா மலர் ஒன்றுதான் மணம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்திராதான், ஜவஹரின் பலம்; ஆறுதல்; எல்லாம்.

கமலா, ஜவஹரின் வீர பத்தினியாக மட்டும் இல்லை. அவருடைய மனிதத் தன்மையின் ஆணிவேராகவும் இருந்தாள். 1934-ஆம் வருஷம் ஜூலை மாதம் பதினோரு நாட்கள் வெளியிலிருந்து விட்டு மீண்டும் சிறைக்கு வந்தாரல்லவா? வந்த சில தினங்களுக்குள் கமலாவின் உடம்பு கேவலமாகி விட்டது. கணவனின் சிறை

வாசந்தான் அவள் உடம்புக்குக் காரணம். ஜவஹரோ, சிறையில் மனம் புழுங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு உலகமே சூனியமாகிவிட்டது. படுக்கையிலே கிடக்கிற கமலா, அவர் அகக் கண் முன்னே அடிக்கடி தோன்றினாள். அவள் உடம்பு எந்த நிலையில் இருக்கிறதென்று அவருக்குத் தெரியப்படுத்த அரசாங்கத்தார் மனங் கொள்ளவில்லை. 1934-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் முழுவதும் இப்படிக் கவலையால் தவித்து நின்றார் தனியே சிறையில். அப்பொழுது, ஏதேனும் நிபந்தனை கொடுத்துவிட்டுச் சிறையிலிருந்து விடுதலை பெறலாமே என்று ஜவஹருக்குச் சிலர் யோசனை கூறினர்! நிபந்தனையுடன் விடுதலையா? தாம் கொடுத்த வாக்கு கொண்ட லட்சியம், எல்லாம் என்னவாவது? தம்மைப் போல் சிறை சென்ற சகோதரர்களின் நிலைமை என்னுவது? "அப்படி விடுதலையடைவேனுயின், என்னுடைய மனிதத் தன்மையின் ஆணி வேருக்கும், நான் எதை எதைத் தெய்விகமாகக் கருதி வந்திருக்கிறேனே அவற்றிற்கும் தீங்கு உண்டுபண்ணியவனுவேன். நான் அப்படி நிபந்தனையுடன் விடுதலையடைந்து வந்திருக்கிறேன் என்று கமலா கேள்விப்படுவாளாயின், அவள் திடுக்கிடுவாள்; என்னைக் கண்டிப்பாள்; இதனுல் அவளுக்குத் தீங்கு உண்டாகும்" என்றார் ஜவஹர்.

அக்டோபர் மாதம், கமலாவைக் காண்பிப்பதற்காக ஜவஹரைச் சிறையிலிருந்து சிறிது நேரம் அழைத்து வந்தார்கள் அதிகாரிகள். ஸ்மரணையற்றுப் படுத்துக் கொண்டிருக்கிருள் தேவி. நல்ல ஜுரம். தன் பக்கத்திலே ஜவஹர் இருக்கவேண்டுமென்ற ஒரே ஆவல். ஆனுல் அஃது எப்படி முடியும்? பக்கத்திலே சிறை அதிகாரிகள் காத்துக் கொண்டிருக்கிருர்களே? என்ன செய்வது? சிறைக்குத் திரும்பிப்போக எழுந்தார் ஜவஹர். அப்பொழுது கண் விழித்தாள் கமலா. பார்த்தாள் எழுந்து நிறகும் ஜவஹரை. முகத்திலே புன்

சிரிப்பை வருவித்துக் கொண்டாள். தன் முகத்தருகே வந்து தலை குனியுமாறு சைகை செய்தாள் கணவனுக்கு. ஜவஹர் மண்டியிட்டு உட்கார்ந்து, கமலாவின் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு போனார். அப்பொழுது கமலா தணிந்த குரலில் சொன்னாள்:—"என்ன இது! ஏதோ தாங்கள் அரசாங்கத்தாரிடம் நிபந்தனை எழுதிக் கொடுத்துவிட்டு விடுதலையடையப் போகிறீர்களாமே, அப்படி ஒன்றும் செய்யாதீர்கள்."

ஜவஹரை ஏற்றிக்கொண்டுவந்த சிறைச்சாலை வண்டி அவருடன் திரும்பிச் சென்றுவிட்டது. ஜவஹரின் மனிதத் தன்மைக்கு யார் ஆணிவேர் என்பது இப்பொழுது தெரிகிறதா? மனிதன் வேறு; மனிதத் தன்மைவேறு. ஜவஹர் மனிதத்தன்மை நிறைந்த மனிதராயிருக்கிறார். இதனாலேயே, இந்தியாவிலுள்ள மனித உருவினராகிய நமக்கு மனிதத் தன்மையை ஊட்ட முயற்சி செய்கிறார்.

# 3. சில வேற்றுமைகள்

காந்தியையும் ஜவஹரையும் எப்படி ஒன்று படுத்திக்கூற முடிகிறதோ அப்படியே இருவரையுமே வேறு படுத்தியும் சொல்லலாம். இரண்டு பேருடைய வாழ்க்கையும் இப்படித்தான் பின்னிக் கொண்டிருக்கிறது. ஜவஹர், தனித்தியங்கும் ஆற்றல் பெற்றவர். மற்றொருவருடைய வெளிச்சத்திலே அவர் பிரகாசிக்கிறார் என்று சொல்வது நம்மை நாம் ஏமாற்றிக் கொள்வதாகும். பூமியானது எப்படித் தன்னைத் தானே வலம் வந்து கொண்டு கூடவே சூரியனையும் சுற்றி வருகிறதோ அப்படியே ஜவஹரும் தனித்துவம் வாய்ந்தவராய், ஆனால் காந்தியடிகளின் ஆன்ம சக்தியில் ஈடுபட்டவராய் விளங்குகிறார் என்று இந்த இரண்டு பேருடைய தொடர்பையும் சுருக்கிக் கூறலாம். ஓர் அறிஞர் இந்த இரண்டு தலைவர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப் பின் வரும் வாக்கியத்தால் வருணிக்கிறார் :—
"ஜவஹரின் அறிவு, காந்தியோடு போராடுகிறது. ஆனால் அவருடைய இதயம், காந்தியைச் சுற்றிச்சுற்றி வலம் வருகிறது."

காந்தி—இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் அதில் சில அமிசங்கள் ஜவஹர்லாலுக்குப் பிடிக்கவில்லை. "அவர் செய்த வியாக்கியானம் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆனால் அவருடைய பேச்சிலே நான் சாந்தியடைந்தேன். திடீர் திடீரென்று சில ஆச்சரியமான நிகழ்ச்சிகளை எங்களுக்கு முன்னால் கிளத்துவது எங்களுக்கு அச்சத்தைத் தருகிறதென்றும் சொன்னேன். அவரோடு பதினான்கு வருஷங்களாக நெருங்கிப் பழகியும் அவரிடத்தில் ஏதோ ஓர் அறியமுடியாத சக்தி இருக்கிற தென்றும், அதற்கு அஞ்ச வேண்டியிருக்கிற தென்றும் கூறினேன். எவராலும் தெரிந்து கொள்ள முடியாத ஒரு சக்தி தம்மிடத்திலே இருக்கிற

தென்றும், ஆனால் அஃது என்ன, பிற்காலத்தில் அஃது எங்கே கொண்டு போய் விடும் என்பவைகளைப் பற்றி தமக்கே தெரியவில்லை யென்றும் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்" என்று ஜவஹர்லால், தமது சுய சரிதத்தில் அடிகளிடத்தில் தாம் ஈடுபடுகிற விதத்தை ஒருவாறு புலப்படுத்தியிருக்கிறார்.

அரசியலினின்று மதத்தைத் தனியாகப் பிரிக்க முடியாதென்றும், இரண்டும் மனிதனுடைய வாழ்க்கையில் பின்னிக் கிடக்கின்றன வென்றும் மகாத்மா அபிப்பிராயப்படுகிறார்.

"மதமின்றி மனிதன் வாழ முடியாது. சிலர் தங்களுடைய குதர்க்க புத்தியைக் கொண்டு, மதத்திற்கும் தங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று சாதிக்கிறார்கள். இஃது எப்படி இருக்கிறதென்றால், நான் மூச்சு விடுகிறேன்; ஆனால் எனக்கு மூக்கு இல்லை என்று சொல்வதைப் போலிருக்கிறது."......"சத்தியத்தின் மீது கொண்ட நம்பிக்கை காரணமாகவே, நான் அரசியல் துறையில் இறங்கினேன். மதத்திற்கும் அரசியலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று சொல்கிறவர்கள், மதம் என்றால் என்ன என்பதை யறியாதவர்கள் என்று நான் நிச்சயமாக, ஆனால் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவை காந்தியடிகளின் வாக்கியங்கள். மதத்தின் துணை கொண்டுதான், தாம் தமது வாழ்க்கையில முன்னேற முடிந்ததென்பதைப் பல இடங்களிலும் அடிகள் ஒப்புக் கொள்கிறார். ஆனால் இவர் மதம் என்பதற்குக் கொண்டுள்ள பொருளுக்கும், மதம் என்ற பெயரால் இப்பொழுது உலகத்தில் நடைபெறும் சம்பவங்களுக்கும் நிரம்ப வேற்றுமை உண்டு; இதையே பண்டித ஜவஹர் கண்டிக்கிறார். இதனால் பண்டிதரை மத நம்பிக்கையில்லாதவர் என்று சிலர் கருதுகின்றனர். இது தவறு. இவர், தமது சுய சரிதத்தின் ஓரிடத்தில் கூறுவதாவது :—

"இப்பொழுது இந்தியாவிலும் மற்ற இடங்களிலும் மதத்தின் பெயரால் நமது முன்னர் தோன்றும் காட்சிகள் உண்மையில் அச்சத்தை அளிக்கின்றன. இதை நான் அடிக்கடி கண்டித்திருக்கிறேன். இதனை அடியோடு தொலைத்து விடவும் நான் விரும்புகிறேன். குருட்டு நம்பிக்கை, பிற்போக்கு, சாரமற்ற கொள்கை, துவேஷம், மூடப் பழக்கம், பிறரைச் சுரண்டுதல், உரிமையாளர்களை நிலைக்கச் செய்தல் ஆகிய இவற்றின் பிரதிநிதியாகவே மதம் உபயோகிக்கப் பெறுவதை நான் காண்கிறேன். ஆனால் மனித சமுதாயத்தின் ஆன்மார்த்தக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அமிசங்களும் இந்த மதத்தின் பால் இருக்கின்றன வென்பதை நான் அறிவேன். இந்த அமிசங்கள் இல்லாவிட்டால், துன்புறுத்தப்பெற்ற எண்ணிறந்த ஆன்மாக்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய ஒரு சக்தியாக இந்த மதம் எங்ஙனம் அமைந்திருத்தல் கூடும்? குருட்டு நம்பிக்கைகளின் ஒதுக்கிடந்தானு இந்த ஆறுதல்? துறை முகத்திற்குள்ளே ஏற்பட்டிருக்கிற அமைதிதானு இந்த ஆறுதல? இல்லை. இதைவிடச் சிறந்த அமிசங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. தற்காலத்தில் மதமானது, அதன் பழைய சரித்திரம் எப்படியிருந்த போதிலும், சாரமற்ற ஒரு சூனியமாகவே இருக்கிறது. மேலை நாட்டு மதங்களிலும் இந்த நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது."

அப்படியானால் மதம் என்பது என்ன? இது பெரிய கேள்வி. இதற்கு இன்னது தான் பொருள் என்று எவரும் ஒருமுகமாக அபிப்பிராயம் சொல்லிவிட முடியாது என்று கூறிவிட்டு மேலும் எழுதுகிறார் ஜவஹர்:—

"மனிதனுடைய அக வளர்ச்சியைக் குறிப்பதாகவும், அவனுடைய ஞானத்தை, நல்லது என்று கருதப்

படுகிற ஒரு வழியில் செலுத்துவதாகவும் இருக்கிறது போலும் இந்த மதம். அஃது எந்த வழி என்பது வாதத்திற்குரிய விஷயமே யாகும். எனக்குத் தெரிந்த வரை, மதமானது, இந்த அகவளர்ச்சியைத் தான் வற்புறுத்துகிற தென்றும், புறத்தில் நிகழும் மாற்றங்களெல்லாம், இந்த வளர்ச்சியின் தோற்றங்களை யென்று கருதுகிறதென்றும் நினைக்கிறேன். உண்மை தான்; இந்த அகவளர்ச்சி, புற மாற்றங்களுக்கு முக்கிய தூண்டுகோலாயிருக்கிற தென்பது சரிதான். ஆனல் புற நிகழ்ச்சிகளும், அகவளர்ச்சியை அதிகமாகப் பாதிக்க வில்லையா? பரஸ்பரம் இரண்டும் நெருங்கிய தொடர்புடையவை. மேலைநாடுகளில் தற்போது, புற வளர்ச்சி மிகவும் அதிகமாயிருக்கிற தென்பது எல்லாரும் அறிந்த விஷயம். இதனுல் மேலை நாட்டாருக்கு ஆன்ம பரிபக்குவம் இன்னும் ஏற்படவில்லை யென்றும், கீழை நாட்டாராகிய நாம், யந்திரத்தொழில் வளர்ச்சியில் பிற்போக்குடையவர்களாயிருப்பதனுல் ஆன்ம பரிபக்குவம் அடைந்து விட்டோமென்றும், நம்மில் சிலர் கருதுவது தவறு. நமமை நாம் திருப்தி செய்து கொள்வதற்கும், நமது தாழ்மையை மறப்பதற்கும் இஃது ஓர் ஏமாற்றமான வழி. புற நிகழ்ச்சிகளைப் புறக்கணித்து விட்டு ஒரு சிலர் மேலுக்கு வரலாம். ஆனல் பெரும்பான்மையான ஒரு ஜன சமூகத்திற்கு, அக வளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னுல், புறவளர்ச்சி அவசியம் தேவை யாகவே இருக்கிறது. பொருளாதார நெருக்கடிகளுக்கு இரையாகியுள்ள ஒருவன், வாழ்க்கைக்காகச் சதா போராடிக் கொண்டிருக்கும் போது, குறிப்பிடக்கூடிய அளவு அகவளர்ச்சியை யடைய முடியாதல்லவா? நசுக்கப்பட்டு சுரண்டப்படுகிற ஒரு சமூகம், ஆன்மார்த்தத் துறையில் எங்ஙனம் முன்னேற்றமடைய முடியும்? எனவே, ஆன்ம வளர்ச்சிக்குப் புற சுதந்திரமும், தக்க சூழலும் வேண்டியே இருக்கிறது."

ஆன்ம வளர்ச்சி எவ்வளவு முக்கியமென்று காந்தியடிகள் கருதுகிருரோ அவ்வளவு முக்கியமாகவே மனிதனுடைய புற சாதனங்களும் வளர்ச்சியடைய வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் கருதுகிருர். "எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடிய சாசுவதமான ஒரு லட்சியத்திற்காக எல்லாத் தடைகளையும் மீறி, எல்லாத் துன்பங்களையும் சகித்துக் கொண்டு செல்லும் பாதை தான் மதம்" என்று ஓர் ஆங்கில அறிஞர் கூறும் கருத்துக்கு ஏற்றதாகப் பண்டிதரின் கருத்தும் இருக்கிறது.

நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள், சுதேச மன்னர்கள் முதலிய பரம்பரைப் பாத்தியமுடையவர்களை, பொது ஜன நன்மைக்காகத் தங்கள் சொத்துக்களையும் உரிமைகளையும் உபயோகப்படுத்துமாறு மெதுவாகத் தூண்டித் திருப்ப வேண்டுமென்று காந்தியடிகள் கருதுகிருர். பணக்காரர்கள், பொது ஜனங்களின் 'டிரஸ்டி'களாக இருக்க வேண்டுமென்றும், இந்த நிலைமைதான் பழைய இந்தியாவில் இருந்ததென்றும் மகாத்மா கருதுகிருர். ஆனல் பண்டிதர், இது செயல் முறையில் நடவாதென்றும், இந்தப் பரம்பரை உரிமை முதலியவற்றை யெல்லாம் வேகமாக மாற்றியமைக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிருர்.

காந்தியடிகள், தற்கால நாகரிகத்தை வெறுக்கிருர்; அனைவரும் எளிய வாழ்க்கை நடத்த வேண்டுமென்று விரும்புகிருர். வறுமையையும் துறவுநிலையையும் போற்றிப் பலமுறை கூறியிருக்கிருர். மனிதன், துன்பத்தை வலிய ஏற்று அதனைச் சகித்துக்கொள்வதன் மூலம், பிறரை வசப்படுத்தி நல்ல வழிக்குத் திருபப முடியும் என்பது அடிகள் கருத்து. இவற்றையெல்லாம் பண்டிதர் மறுக்கிருர். தமது சுயசரிதத்தின் ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகிருர் :—

"வறுமை, துன்பம் சகித்தல் முதலியவற்றைப் போற்றுவது எனக்குப் பிடிக்கவில்லை. இவை அனுவசியமென்று நான் கருதுகிறேன். இவை விரைவில் ஒழிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். தனிப்பட்ட ஒரு சில பேருக்குத் துறவுநிலை பொருத்தமேயாயினும், அதனை ஒரு சமூக லட்சியமாகக் கொள்ளுதலை என்றால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எளிமை, சமத்துவம், தன்னடக்கம் ஆகிய இவை சரிதான்; வேண்டியவைதான். ஆனால் தேகத்தை ஏன் துன்பத்திற்குள்ளாக்க வேண்டும்?.........ஒருவன் நல்ல ஒழுக்க நிலையில் இருக்க வேண்டுமானால், அவனுடைய தேகமும் நல்ல முறையில் அமைந்திருக்க வேண்டாமா?"

"மற்றும், குடியானவர்களின் எளிய வாழ்க்கையைப் பாராட்டிக் காந்தியடிகள் அடிக்கடி பேசுவதை நான் விரும்பவில்லை. குடியானவர்களின் வாழ்க்கையைக் கண்டாலே எனக்குப் பயமாயிருக்கிறது. நான் இந்த வாழ்க்கைக்கு உட்படுவதற்குப் பதிலாக, குடியானவர்களை மேலுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே என் விருப்பம். இதற்காக, கிராமவாசிகளையெல்லாம் நகரவாசிகளாக்கி விடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் நகர வசதிகளெல்லாம் கிராம ஜனங்களுக்குக் கொடுக்கப் பெற வேண்டுமென்றுதான் கோருகிறேன். இந்தக் குடியானவர்களின் வாழ்க்கை, உண்மையான சந்தோஷத்தை எனக்கு அளிப்பதற்குப் பதிலாக என்னைச் சிறை வைத்ததுபோலவே இருக்கிறது. தலைமுறை தலைமுறையாக நசுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வருகிற குடியானவன், அவனோடு கூட இருந்து பழகுகிற மிருகங்களின் நிலையினின்று சிறிது விலகினவனாயிருக்கிறானே தவிர வேறொன்றுமில்லையே. அவனுடைய வாழ்க்கையை லட்சியமாகக் கொள்வதெப்படி?......... தற்கால நாகரிகத்தில் தீய அமிசங்கள் இருக்கின்றன

ஆனால் அதில் பல நல்ல அமிசங்களும் இருக்கின்றன. தீமைகளை அகற்றும் சக்தியும் இந்த நாகரிகத்திற்கு உண்டு. இந்த நாகரிகத்தை அடியோடு அழித்துவிடுவதென்பது, தீமையைப் போக்கக்கூடிய இந்தச் சக்தியையும் அழித்துவிட்டு, உயிரற்ற ஒரு வாழ்க்கை நிலைக்குத் திரும்பிச் செல்வதாகும். ஒருகால் இந்தத் தற்கால நாகரிகத்தை அழிப்பதாயிருந்தாலும் அது முடியாத காரியமாயிற்றே! காலப்போக்கை நாம் எப்படி மாற்ற முடியும்? அல்லது அதனின்று நாம் ஒதுங்கித்தான் இருக்க முடியுமா?"

இத்தகைய கருத்துக்களை ஜவஹர் கொண்டிருப்பதனாலேயே, கதரும், கைராட்டினமும், தற்காலிகத் தேவையைப் பூர்த்தி செய்யலாமே தவிர, இவற்றினால் நிரந்தரமான நன்மை ஏற்படாதென்று கருதுகிறார். யந்திரத் தொழில் அபிவிருத்தி இந்தியாவில் பூரணமாக ஏற்பட வேண்டுமென்றும், அப்படி முன்னேற்றமடைந்த நாடுதான் சுதந்திரமாக இருக்க முடியுமென்றும் பண்டிதர் வலியுறுத்திப் பன்முறை பேசியிருக்கிறார்.

காந்தியடிகள், எளிய வாழ்க்கையில் பற்றுள்ளம் கொண்டவராதலின் கட்டை வண்டியையும் கால் நடையையும் அதிகமாக விரும்புகிறார். ஆனால் பண்டிதரோ ஆகாய விமான வேகம் போதாதென்று பறக்கிறார். உலகமானது, தற்போது மிக வேகமாக மாறுதலடைந்து வருகிறதென்றும், அதற்கிசைய நாம் நடந்துகொள்ளாவிட்டால், படுகுழியில் விழ வேண்டியதுதானென்றும் ஜவஹர் கருதுகிறார். சாதாரணமாக இவர் மோட்டாரில் ஏறிச் செல்லுகையில், அஃது எவ்வளவுக் கெவ்வளவு வேகமாகச் செல்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு இவருக்கு மகிழ்ச்சி.

ஆண் பெண் சம்பந்தத்தைப் பற்றியும் காந்தியும் ஜவஹரும் கருத்து வேற்றுமை கொண்டிருக்கின்றனர்.

பிள்ளைப் பேறு என்ற ஒரு காரணத்திற்காகத்தான் ஆணும் பெண்ணும் கூடலாமே தவிர, மற்றபோது கூடுவதெல்லாம் குற்றமேயாகுமென்றும், கர்ப்பத் தடை முறைகள் மனிதனைக் கீழே வீழ்த்தி விடுகின்றன வென்றும், புலனடக்கம் மிகவும் அவசியமென்றும் அடிகள் கருதுகிறார். "ஆணும் பெண்ணும் சந்திக்கிற போது, அந்தச் சந்திப்பு சகோதர சகோதரி சந்திப்பாக வும், தாய் மகன் சந்திப்பாகவும், தந்தை மகள் சந்திப் பாகவும் இருக்கவேண்டுமே தவிர, வேறெந்த முறையி லும் இருக்கக்கூடாது. இது முடியாத காரியமுமல்ல. சட்டப்படி விவாகம் செய்துகொண்ட தம்பதிகள் கூட, புருஷன் மனைவி என்ற மனப்பான்மையில் சந்திப்பது இயற்கை நியதிக்கு விரோதமானதுதான்" என்கிறார் கஸ்தூரிபாயின் கணவனார். இது விபரீதமான தத்து வம் என்கிறார் கமலாவின் கணவனார். "என்னைப் பொறுத்தமட்டில், காந்தியடிகளின் கொள்கை தவறு என்று நினைக்கிறேன். ஒரு சிலருக்கு அவருடைய இந்த உபதேசம் பொருந்தலாம். பொதுவாக இந்தக் கொள் கையை அனுஷ்டிக்குமாறு கூறுவது உடல் நோய்கள் பலவற்றை வருவித்துக் கொள்வதாகும். புலனடக்கம் நிரம்பவும் தேவைதான். ஆனால் காந்தியடிகளின் தத்துவத்தைப் பொதுவாக ஏற்றுக்கொள்ள முடியுமா வென்பது சந்தேகம். இந்தத் தத்துவம் மிகக் கடுமை யானதென்றும், இதன்படி தங்களால் நடக்க முடியா தென்றும் சொல்லி, பலர் தங்கள் வழக்கப்படியே நடந்து வருகின்றனர். அல்லது கணவனுக்கும் மனை விக்கும் சச்சரவு ஏற்படுகிறது. கர்ப்பத்தடை முறை களை அனுஷ்டிப்பதன் காரணமாக ஆண் பெண் சம்பந் தம் அதிகப்படுகிறதென்றும், ஆணுக்கும் பெண்ணுக் கும் இடையே இயற்கையாகவுள்ள வசீகர சக்தியை நாம் ஏற்றுக்கொண்டு விட்டோமானால், ஸ்திரீகள் புருஷர்களையும் புருஷர்கள் ஸ்திரீகளையும் விரட்டிச்செல்

வார்களென்றும் காந்தியடிகள் கருதுகிறார் போலும். இந்த இரண்டு கருத்துக்களும் தவறு......அவருடைய கொள்கை, உலகத்தைத் துறந்த ஒரு சந்நியாசிக்குப் பொருத்தமானதாயிருக்கலாம். ஆனால் அன்றாட உலக வாழ்க்கையிலே ஈடுபட்டுள்ள சாதாரண மக்களுக்கு இது பொருந்துமா வென்பது கேள்வி. ஒரு துன்பத் திற்குப் பரிகாரந் தேடப்போய் இன்னும் பல துன்பங் களை ஏற்றுக்கொள்கிறோமல்லவா?" இவை ஜவஹரின் வாக்கியங்கள்.

இங்ஙனம் வாழ்க்கையின் பொதுவான சில விஷயங்களில் இந்த இரண்டு தலைவர்களுக்கும் அடிப்படை யான அபிப்பிராய வேற்றுமைகள் இருக்கின்றன. இவை தவிர, அவ்வப்பொழுது நடைபெற்ற பல முக்கிய சம்பவங்களைப் பற்றி இரண்டுபேரும் வெவ் வேறாக நினைத்திருக்கிறார்கள்.

*1934*-ஆம் வருஷம் ஜனவரி மாதம் பீகாரில் பெரிய பூகம்பம் ஏற்பட்டதல்லவா? இந்தக் காலத்தில் பண்டித ஜவஹர் ஆற்றிய தொண்டுகள் சரித்திர நிகழ்ச்சிகள். பொன்னைத்தொட்ட கையிலே, பூவைப் பிடித்த கையிலே, கடப்பாரையை ஏந்திக்கொண்டு, இந்திராவை எடுத்து மகிழ்ந்த இனிய தோளிலே மண்வெட்டி தாங்கிக்கொண்டு, தொண்டர்களுக்குத் தலைவனாய், ஆனால் தலைவர்களுக்கு முதல்வனாய், அவர் சென்ற காட்சியை, இந்தியாவின் வருங்கால சந்ததி யாருக்குச் சித்திரித்துக் காட்ட, ஏ ரவிவர்மா! நீ கூட இல்லையே. இந்தப் பூகம்பத்தைப் பற்றிக் காந்தியடிகள் விடுத்த ஓர் அறிக்கையில், தீண்டாமைப் பாவத்திற் காகவே, கடவுள் இந்தத் தண்டனையை அருளினார் என்று கூறினார். இதை அப்பொழுதே கவியரசர் ரவீந்திரரும் மறுத்தார். இந்த முடிவு, விஞ்ஞான ஆராய்ச்சிக்கு முரணானது என்பது பண்டிதரின் கருத்து. "நம்முடைய பாவத்திற்குக் கடவுள் தண்

டணையாக இந்தப் பூகம்பம் ஏற்பட்டதென்றால் எந்தப் பாவத்திற்காக இஃது ஏற்பட்டதென்று எப்படித் தெரிந்து கொள்வது? அந்தோ! நாம் வருத்தப்பட வேண்டிய பாவங்கள் எத்தனையோ செய்திருக்கிறோமே. ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் எண்ணம் தோன்றலாம். அந்நிய ஆட்சிக்கு நாம் உட்பட்ட பாவத்திற்காக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கலாம். ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூக வாழ்வை ஆதரித்து வருவதற்காக நமக்கு இந்தத் தண்டனை ஏற்பட்டிருக்கலாம். இந்தப் பூகம்பத்தினால் தர்பங்கா மகாராஜா—இவருக்கு பீகாரில் ஏராளமான பூஸ்திதிகள் உண்டு—அதிக நஷ்டமடைந்தார். எனவே ஜமீன்தாரி முறையின் மீது விதிக்கப்பட்ட தண்டனை என்று இந்தப் பூகம்பத்தைச் சொல்லலாமே. தீண்டாமைப் பாவத்திற்காக இந்தப் பூமியதிர்ச்சி ஏற்பட்டதென்றால் தீண்டாமை வழக்கம் அதிகமாக அனுஷ்டானத்தில் இருக்கும் தென்னிந்தியாவுக்கன்றோ இது வந்திருக்க வேண்டும்? அல்லது சட்டமறுப்பு முதலிய இயக்கங்களில் பீகார் மாகாணம் அதிகமான பங்கெடுத்துக் கொண்டதற்காகக் கடவுள் இந்தத் தண்டனையை அதற்கு விதித்தார் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார்கூட நினைக்கலாமே.” இந்தத் தோரணையில், காந்தியடிகளின் கொள்கையைப் பண்டிதர் பரிகசித்திருார்.

இதே மாதிரி, பொதுஜன சட்ட மறுப்பியக்கம் கடைசி முறையாக 1934-ஆம் வருஷம் நிறுத்தப்பட்டதல்லவா? அதைப்பற்றிக் காந்தியடிகள் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், சபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்தைச் சேர்ந்த சிலர், ஒரு சத்தியாக்கிரகிக்குரிய கடமைகளைச் செய்யவில்லை என்றும், இவர்களுடைய குற்றம் தமது குற்றமே யாகுமென்றும் காரணங்கள் சொல்லியிருந்தார். இது ஜவஹருக்குப் பிடிக்கவில்லை. “ஒருவன் தவறு செய்து விட்டதற்காக ஆயிரக்கணக்

கான பேரை நேர்முகமாகவும் லட்சக்கணக்கான பேரை மறைமுகமாகவும் சம்பந்தப் படுத்திக் கொண்டிருக்கிற ஒரு தேசிய இயக்கத்தை நிறுத்திவிடலாமா?" என்று இவர் கேட்கிருர். காந்தியடிகள் சட்ட மறுப்பியக்கத்தை நிறுத்தியது சரியென்று இவருக்குப் பட்ட போதிலும் அதற்காகக் கூறிய காரணங்களை இவர் கண்டித்து விட்டார்.

இன்னும் சில வேற்றுமைகளைப் பற்றிக் கவனிப்போம். காந்தி பேசுகிறபோது, அவருக்குள்ளே அந்தர்யாமியாக இருக்கும் ஒரு சக்தி பேசுகிறதாகத் தோன்றும். ஜவஹர் பேசினுல், ஓர் எரிமலை அக்கினிக் குழம்பைக் கக்குவதுபோல இருக்கும். மகாத்மாவின் சந்நிதானத்தில் நிற்கிற எவனுக்கும், உண்மையைத் தவிர வேருென்றையும் எடுத்துச் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. பண்டிதரின் பார்வை பெற்ருேர், மனிதத் தன்மை நிறைந்த கம்பீரத்திஞல் ஆட்கொள்ளப் படுகிருர்கள். காந்தியம் பெருமான், உலகத்திற்கே ஒரு புதிய தத்துவத்தைச் சிருஷ்டி செய்து கொடுத்திருக்கிருர். அதுவே அஹிம்ஸா தத்துவம்; சத்தியாக்கிரகக் கொள்கை. இதஞல், அவர் உலக மகா புருஷர்களின் வரிசையில் வைத்துப் போற்றப்படுகிருர். இத்தகைய மகான்களுக்குத்தான் எவருக்கும் தோன்ருத சில புதிய கருத்துக்கள் தோன்றும். அக்கருத்துக்களை ஜன சமூகத்தின் மத்தியில் திடீர் திடீரென்று அவர்கள் கொண்டு வந்து போடுவார்கள். விளைவு என்ன? அறிவுத் துறையிலே ஒரு கலக்கம். மானஸிக உலகத்திலே ஒரு பரபரப்பு. இந்த மகான்கள் சொல்வனவும், செய்வனவும் ஒரு சமூகத்தின் வாழ்க்கைப் போக்கையே மாற்றி விடுதலும் கூடும். இத்தகைய சொல்லையும் செயலையும் காந்தியடிகளிடத்தில் பலமுறை கண்டிருக்கிருேம். இவர் செல்லுகின்ற பாதையில், அடுத்தபடி என்னவென்

பதை நம்மால் நிர்ணயித்துக் கூற முடிவதில்லே. அப்படி நாம் எதிர்பாராத ஒரு படியில் இவர் காலடி எடுத்து வைத்துவிட்டு, அதற்குச் சமாதானங்கள் சொல்கிறபோது, நமது அறிவு அவற்றை அங்கீகரிப்பதுமில்லே. ஆனால் இவர் செய்தது சரியென்று மட்டும் நமது இதயம் கூறிக்கொண்டு இவரைப் பின் தொடர்ந்து செல்கிறது. இதுவே மகான்களுக்கு இயற்கையா யமைந்துள்ள சக்தி. இந்தச் சக்தியனைத்தும் அப்படியே காந்தியடிகளிடத்தில் பிரதிபலிப்பதைக் காண்கிறோம். இவர் இந்தியாவின் தேசியத் தலைமைப் பதவியை வகிப்பது உலக நாயகத்துவத்தின் ஓர் அமிசந்தான். இந்த இரண்டு வேலைகளையும் ஒருவரே சேர்ந்து பார்க்க முடியுமாவென்பது சிலர் கேள்வி. அதாவது, உலகமெல்லாம் ஒன்றெனக் கருதும் பெருந் தலைவர்களின் தலைமையின் கீழ், ஒரு நாடு முன்னேற்ற மடைய முடியுமாவென்பது இவர்கள் சந்தேகம். தேசீயமும் உலக சகோதரத்துவமும் ஒன்றுசேர முடியாதென்பது இவர்கள் நம்பிக்கை. இந்த நம்பிக்கை சரியா தவரு என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்காமல், தேசீயம், உலக சகோதரத்துவம் என்ற இரண்டு தன்மைகளும் ஒருங்கே காந்தியடிகளிடத்தில் அமைந்திருக்கின்றன வென்பதை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம்.

ஜவஹர்லால் நேருவுக்கு இன்னும் உலக நாயகப் பதவி ஏற்படவில்லே. அப்படி ஏற்படாமலிருக்க வேண்டுமென்பதே சிலருடைய பிரார்த்தனே. அப்பொழுதுதான் இவரால் நமது தாய்நாட்டுக்கு அதிகமான நன்மை செய்ய முடியுமென்பது அவர்கள் எண்ணம். ஆனால் ஜவஹர், தேசீய சக்திகளின் தலைவர் என்ற முறையில் சுருங்கிய காலத்தில் பெரிய மனப்புரட்சியை இந்தியாவில் உண்டு பண்ணியிருக்கிருர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லே.

மானிட சமூகம் அவ்வப்பொழுது கீழ்நோக்கிப் போய்க் கொண்டிருந்தால், அதனைக் கைதூக்கிவிட சில அவதார புருஷர்கள் தோன்றுவது வழக்கம். அப்படித் தோற்றுவிக்கும் பெருமை இந்தியாவுக்குத்தான் உண்டு. அத்தகைய அவதார புருஷர்களில் ஒருவராகவே காந்தியடிகளை உலகத்தார் போற்றுகின்றனர். இதனால் ஹிந்துவாகப் பிறந்த காந்தியை, ஹிந்துவாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் காந்தியை, கிறிஸ்துவர்களும், பௌத்தர்களும் வேறு பல சமயத்தினரும் வணங்குகிறார்கள்; வாழ்த்துகிறார்கள். இந்தக் கண் கொண்டுதான் இந்திய அரசியல் வாதிகளும் இவரைப் பின்பற்றுகிறார்கள்.

பண்டித ஜவஹரோ, சுதந்திர லட்சியத்திற்காக எல்லாத் துன்பங்களையும் புன்சிரிப்புடன் ஏற்றுக் கொண்டு, முன்னோக்கிப் பார்க்கும் வீரர் பரம்பரையினரை நமக்கு நினைவு படுத்துகிறார்.

காந்தியடிகள், இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் ஒன்று பிணைக்கும் சங்கிலி. பழமைப் பலகணியின் மூலமாகத்தான் இவர் புதுமை வெளிச்சத்தைப் பார்க்கிறார். இறந்த காலத்திலிருந்துகொண்டுதான் நிகழ் காலத்திலே வாழ்கிறார்.

ஜவஹரோ நிகழ் காலத்திலே வாழும் நம்மை எதிர் காலத்திற்கு அழைத்துச் செல்லும் ஏணியாக இருக்கிறார். இவர் ஒரு சமயம் சாந்தி நிகேதனத்திற்குச் சென்றார். ரவீந்திரர் இவரை வரவேற்று உபசரிக்கையில், தமது கையை இவர்கைமீது வைத்துக் கண்களிலே நீர் ததும்ப, தழுதழுத்த குரலில் " இந்தியாவின் வருங் காலம், இளஞரேறே! உன்னிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது " என்று கூறினார். அந்தப் பொறுப்பை ஏற்கும் பாவனையாக ஜவஹரும் தலை குனிந்தார். இந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கிறபொழுது நம்மை அறியாமலே நமது கண்களில் நீர் பெருகுகிறதல்லவா?

# 4. மகாத்மா

சபர்மதி நதிக்கரையிலே யிருந்த சத்தியாக்கிரக ஆசிரமத்திற்கு 1921-ஆம் வருஷம் கவியரசர் ரவீந்திர நாத் தாகூர் விஜயஞ்செய்தார். காந்தியடிகளின் கீர்த்தி சந்திரன், அப்பொழுதுதான் கலை விரித்துப் பிரகாசிக்கத் தொடங்கி யிருக்கிறான். கவிஞர், கற்பனை உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர். காந்தியோ, மண்ணுலகத்தில் கால் வைத்து நடக்கிறவர். இருவருடைய சந்திப்பிலே ஏதேனும் பயன் விளையுமாவென்று அக்காலத்தில் நினைத்தவர் பலர். ஆனால் குருதேவர்—ரவீந்திரரின் பட்டப் பெயர்—அப்பொழுது காந்திக்கு 'மகாத்மா' வென்று பட்டஞ் சூட்டிச் சென்றார். அது முதல், 'மகாத்மா' வென்ற எதிரொலி உலகமெங்கணும் கேட்கத் தொடங்கியது. பட்டதாரிக்குத்தான் பட்டஞ் சூட்ட உரிமையுண்டு. கர்மயோகிக்கு 'மகாத்மா' பட்டங்கொடுத்தான் கவிதிலகன். சரியாகப் பதினைந்து வருஷங் கழித்து, அந்த 'மகாத்மா' பட்டதாரி, பெய்ஸ்பூரில் ஒரு கர்ம வீரனுக்கு 'ராஷ்ட்ரபதி' பட்டஞ் சூட்டினான். வாழ்க ஜவஹர்!

காந்தியடிகளின் ஆன்ம சக்திக்கு முன்னர், சித்தரஞ்சன தாஸரின் செல்வம், மோதிலால் நேருவின் மிடுக்கு, ஹகீம் அஜ்மல்கானின் பரம்பரைப் பெருமை, சரோஜினி தேவியின் கவிதை ஒலி முதலிய யாவும் அடங்கிவிட்டன; ஆனால் புனிதமும் பெற்றன. காந்தி, தமது ஆன்ம வளர்ச்சிக்காக மட்டும் பாடுபட்டுக் கொண்டிருந்திருப்பாரானால் இவருக்கு இந்தப் பெருமை ஏற்பட்டே இராது. மேற்கூறப்பட்ட தலைவர்களும் இவருடைய புன்சிரிப்புக்கு வசியப் பட்டிருக்கமாட்டார்கள். பண்டித மோதிலால் நேரு ஒரு சமயம் கூறினார்:—

"நான் ஞானிகளைப் பற்றியும் அமானுஷிகர்களைப் பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனுல் அவர்களைச் சந்திக்கும் பாக்கியம் பெற்றேனில்லை. அவர்கள் உண்மையிலேயே இருக்கிருர்களா வென்ற சந்தேகமும் எனக்கு உண்டு. நான் மனிதர்களையும் மானிட சக்திகளையுமே நம்புகிறவன். காந்தியின் சொல்லும் செயலும் மனிதத்தன்மை நிறைந்தவை...இந்தச் சிறிய உருவம், அசைக்க முடியாத நம்பிக்கையின் மீது, வெற்றி கொள்ள முடியாத உறுதியின் மீது நிமிர்ந்து நின்று கொண்டு, தாய் நாட்டுக்காகத் தான் செய்யும் தியாகங்களாகிற செய்திகளை விடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் செய்திகள், லட்சக்கணக்கான இதயங்களில் எதிரொலி செய்து கொண்டிருக்கின்றன."

காந்தி, ஒரு மகாத்மா வென்பதற்காக மோதிலால் இவருக்குப் பணியவில்லை; மனிதத்தன்மை நிறைந்தவர் என்பதற்காகவே பணிந்தார். வணங்கா முடிமன்னனுக வாழ்ந்த அவர், காந்தியின் ஆன்ம சக்தி முன்னர் வணங்கினுர். இந்த ஆன்ம சக்தியை, ஜவஹர்லால் தமது சுயசரிதத்தில் பின்வருமாறு உருவப்படுத்திக் காட்டுகிருர்:—

"மெலிந்த, குறுகிய இந்த மனிதரிடத்திலே எஃகு போன்ற உறுதியும், எத்தகைய பெரிய ஸ்தூல சக்திகள் வந்த போதிலும் எதிர்த்து நிற்கவல்ல கற்பாறைத் தன்மையும் இருக்கின்றன வென்பது வெளிப்படை. வசீகரத் தன்மையில்லாத அவயவங்கள்; இடுப்பிலே ஒற்றைத்துணி; திறந்துள்ள தேகம். ஆனுல் இவரிடத்தில் ஒரு ராஜகளை இருக்கிறது; மற்றவர்களை ஆட்படுத்தும் அரச தன்மை பிரகாசிக்கிறது. இவர் அறிந்தே அடக்கமா யிருக்கிருர். ஆனுல் அதிகாரஞ் செய்வதில் அதிசூரர். சில சமயங்களில் எப்படியாவது கீழ்ப்படிய வேண்டியதுதான் என்று நம்மைக் கட்டாயப் படுத்தக் கூடிய மாதிரி, உத்தரவுகள் போடும்

மிடுக்கு இவரிடம் நிரம்பி யிருக்கிறது. இவருடைய சாந்தி நிறைந்த ஆழமான கண்கள், நம்மை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்து, பின்பு நம்மிலே மெதுவாக நுழைந்து பார்க்கின்றன. நிதானமாகவும் தெளிவாகவும் உள்ள இவரது வார்த்தைகள், நமது இதயத்தைப் பீறிச் சென்று, நமது உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புகின்றன. இவருடைய பிரசங்கத்தைக் கேட்க வந்தவர்கள், ஒருவராயிருந்தாலும் சரி, ஆயிரம் பேராயிருந்தாலும் சரி, இவருடைய இனிமையும் வசீகர சக்தியும் அனைவரிடத்திலும் ஊடுருவிப் பாய்ந்து இவரோடு ஜனங்களைக் கலக்க விடுகின்றன.''

இந்த உண்மையை, 1920-ஆம் வருஷத்திலிருந்து தொடங்கப் பெற்ற ஒத்துழையா இயக்கம், சட்டமறுப்பியக்கம் முதலியவற்றில் நாம் நன்ருகக் கண்டோம். இவரிடத்தில் தேசம் வைத்திருந்த அபார நம்பிக்கை காரணமாகவே, இவர் காங்கிரஸின் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டார். அந்த நிலையில் இவரைப் பற்றிப் பல திறத்தினரும் ஒரு முகமாக நினைக்க முடியாதல்லவா? எனவே, ஜவஹர்லால் நேரு கருத்துப்படி "இவர் சில சமயங்களில் ஆச்சரியமான பிற்போக்குள்ள லட்சியத்தைக் கொண்டிருந்தார்; ஆனால் செயலிலோ பெரிய புரட்சிக்காரராயிருந்தார். எனவே, சாதாரண தர்க்க ரீதியைக்கொண்டு இவருடைய செயல்களைக் கவனிக்க முடியாமலிருக்கிறது. அடிப்படையில் இவர் புரட்சிக்காரராயிருப்பதனாலும், இந்தியாவின் அரசியல் சுதந்திரத்திற்குத் தம்மை அர்ப்பணம் செய்து விட்டிருப்பதனாலும், அந்தச் சுதந்திரத்தை இந்தியா பெறுகிற வரையில், எவராலும் மறுக்க முடியாத ஓர் உன்னத ஸ்தானத்தை இவர் வகிப்பார்.''

மகாத்மா, இந்தியாவின் உண்மையான பிரதிநிதி என்பதைப் பின்வரும் வாக்கியங்களினால் பண்டித ஜவ

ஹார் சித்திரித்துக் காட்டுவது எவ்வளவு பொருத்தமா யிருக்கிறது :—

"காந்தியடிகள் ஜனநாயக வாதியா இல்லையா என்பது கேள்வியன்று. இவர் இந்திய விவசாயிகளின் பிரதிநிதி; கோடிக்கணக்கான மக்களினுடைய தன் னம்பிக்கையின் வடிவம். இவர் வெறும் பிரதிநிதியாக மட்டும் இல்லை; இந்திய மக்களின் லட்சிய புருஷனுக வும் இருக்கிருர். இவரைச் சாதாரண குடியானவ னென்று சொல்லிவிட முடியாது. இவர் கூரிய அறிவு படைத்தவர்; நுண்ணிய உணர்ச்சிகள் நிரம்பிய ரசி கர்; விசால நோக்குடையவர்; தமது ஆசைகளையும் கோப தாபங்களையும் அடக்கி அவற்றைத் தூய்மைப் படுத்திப் பாரமார்த்திகத் துறையிலே செலுத்தினவர்; மின்சார சக்திபோல் அனைவரையும் தம்வசம் இழுக்கும் சிறந்த தன்மையர். இந்தக் குணங்களெல்லாம், ஓர் ஏழை விவசாயிக்குப் புறம்பானவை. ஆனுலும் இவர் பெரிய ஒரு விவசாயிதான். மானிட வாழ்க்கையை ஒரு விவசாயி எந்தக் கண்கொண்டு பார்க்கிருனே, அந்த நோக்கோடுதான் இவரும் வாழ்க்கையை நோக்குகிருர். அந்த விவசாயியின் கண் மூடித்தனமும் இவரிடம் இருக்கிறது. ஆனுல் இந்தியா, விவசாய இந்தியா. இவர் இதனை நன்கு அறிந்திருக்கிருர். அதன் சாதாரண துடிப்பைக்கூட கவனிக்கிருர். அதனுல் ஏற்படும் நிலைமையைத் தமது இயற்கையறிவினுல் நுணுக்கமா கத் தெரிந்து கொள்கிருர். தாம் கவனித்ததைத் தக்க சமயத்தில் செயலில் கொணர்கிருர்."

மகாத்மா, இந்திய தேசீய இயக்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு, இந்திய அரசியல் உலகத்தில் ஒரு புனிதக்காற்று வீசத் தொடங்கியது. அதுவரை, அரசியலானது ஒரு பொழுதுபோக்கு வேலையாகவே கருதப்பெற்று வந்தது. இதை அடி

யோடு மாற்றி, அரசியலுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, அதில் ஒழுக்கத்தையும் புகுத்திய பெருமை காந்தியடிகளுக்குத்தான் உண்டு.

காந்தியடிகள்பெரிய விஷயங்களிலே ஈடுபட்டவரா யிருந்தும், சிறு விஷயங்களைக்கூட கூர்மையாகக் கவனிக்கும் ஆற்றல் பெற்றவர். 1932-ஆம் வருஷம் இவர் உண்ணாவிரதமிருந்த காலத்தில், சிறையிலே இருந்த ஜவஹர்லாலுக்கு ஒரு தந்தி அனுப்பியிருந்தார். அதில், "இந்தத் துன்பமான நாட்களில், என் மனக் கண் முன்னர் நீங்கள்தான் நிற்கிறீர்கள். உண்ணா விரதத்தைப்பற்றி உங்கள் கருத்தைத்தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உங்கள் அபிப்பிராயத்தை எவ்வளவு மதிக்கிறேன் என்பது எங்களுக்குத் தெரியும். இந்திரா வையும் உங்கள் சகோதரி குழந்தைகளையும் இன்று பார்த்தேன். இந்திரா சந்தோஷமாயிருக்கிறாள். சிறிது பருத்தும் இருக்கிறாள். நான் சௌக்கியமாய் இருக் கிறேன். பதில் தந்தி கொடுங்கள். என் அன்பு" என்று குறிப்பிட்டிருந்தார். தாம் உண்ணாவிரதமிருந்தகாலத் திலே, "என் மகள் வந்ததையும் அவள் தேகம் பருத் திருக்கிறதென்பதையும் இவர் எப்படிக் கவனித்தார்?" என்று ஜவஹர் ஆச்சரியப்படுகிறார்.

காந்தி யார்? ஒரு வசீகர சக்தி; ஆழ்ந்த அஸ்தி வாரமுடைய ஸ்தாபனம்; எல்லா மதங்களும் ஒன்று கூடும் தனிமதம். ஆனால் இவரை ஒரு தெய்வமாக வழிபட்டு நின்றுவிடுவதோடு நாம் திருப்தியடைய லாமா? கூடாது. இவர் வாழ்க்கை, நமது தினசரி வாழ்க்கையில் ஐக்கியமாக வேண்டும். இதை அடிகளே ஓரிடத்தில் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார்:—

"என்னுடைய நண்பர்கள் எனக்குச் செய்யும் சிறந்த கௌரவமானது நான் எந்தெந்த வேலைத்

திட்டங்களின் பிரதிநிதியாக இருக்கின்றேனே அந்த வேலைத் திட்டங்களைத் தங்கள் வாழ்க்கையில் கொண்டு வருவதேயாம். அவர்களுக்கு அதில் நம்பிக்கையில்லாவிட்டால், தங்கள் முழு பலத்துடன் அவற்றை எதிர்க்க வேண்டும். இது செயல் காலம். இந்தக் காலத்தில் குருட்டுத்தனமாக எதனையும் பின்பற்றுவது கூடாது. அதனால் பயனில்லை."

# 5. ராஷ்ட்ரபதி

ராஷ்ட்ரபதி. தேசத்தலைவன். இந்தப் பட்டத்தைப் பெற்றது யார்? கொடுத்தது யார்? பெற்றது ஜவஹர்; கொடுத்தது காந்தி. கொடுத்தவர் கொடையாளி, பெற்றவர் பாக்கியசாலி. காந்திதான் இந்தப்பட்டத்தை வேறு யாருக்காவது கொடுத்திருப்பாரா? அப்படிக் கொடுத்தாலும் வேறு யாராவது வாங்கிக் கொள்ளத் தான் துணிவாரா?

ராஷ்ட்ரபதி என்ற பட்டம் ஜவஹருக்கு ஏன் கொடுக்கப்பட்டது? ஏனென்றால் ஜவஹர், காலத்தின் எதிரொலி; தேசத்தின் அபிலாஷை; வருங்கால நம்பிக்கையின் உதய சூரியன். ஆனால் எல்லாவற்றையும் விட கமலாதேவியின் கணவன். கோடை வெயிலிலே, புழுதி மண்ணிலே, கால் கொதிக்க நடந்துசென்று, கூப்பிய கையோடு ஆங்காங்கு "ஐய, சுதேசியத்தை ஆதரியுங்கள்" என்று பிரசாரம் செய்ததன் பலனாகச் சிறைபுகுந்து, உடல் மெலிந்து, நோயுற்று, அந்நிய நாட்டில் மரணப் படுக்கையிலே கிடந்த காலத்தில்கூட அருகிருந்த கணவனைப்பார்த்து "நாயக! என் பதியாக இங்கிருந்து லட்சியத்திலே பார்வையுடைய தங்கள் கண்களிலே கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பதைக் காட்டிலும், தாய்நாட்டுக்குச் சென்று ராஷ்ட்ரபதியாக இருந்து, லட்சக்கணக்கான மக்களின் கண்ணீரைத் துடையுங்கள்" என்று கணவனின் உள்ளங்கையைத் தன் கண்களிலே ஒற்றிக்கொண்டு விடை கொடுத்த வீராங்கனை கமலா நேருவின் இருதய மூர்த்தியல்லவா ஜவஹர்! அணையாத அமரஜோதியை ஏற்றியவரல்லவா ஜவஹர்! தூக்குமேடையிலே கூட காந்தியோடு சேர்ந்து நிற்கத் தயாராயிருக்கும் ஜவஹர்—ஆ! அந்தக் காலம், தேவி! ஒருநாளும் வரவேண்டாம். "எங்களுடைய ஜவஹர் எங்களுக்கு எப்பொழுதும் இருக்க

வேண்டும். எங்களுக்கெட்டாத ஒரு தெய்வமாக இருப்பதைக் காட்டிலும் எங்களிலே ஒருவராக இருக்க வேண்டும் ஜவஹர்.'' இதுதான் பாரத மக்களின் நித்தியப் பிரார்த்தனை.

காங்கிரஸ் தலைமைப்பதவி, இதுவரை எவருக்கும் அடுத்தடுத்து இரண்டு வருஷமும் தொடர்ந்தாற்போல் வழங்கப்பட்டதேயில்லை. ஜவஹருக்குத்தான் இந்தக் கௌரவம் கிடைத்திருக்கிறது. இன்னமும் கிடைக்கலாம். எனவே ஜவஹர் ராஷ்ட்ரபதி யானதில் என்ன விநோதம் !

தலைவனாக ஒருவன் வரவேண்டுமானால் அவன் எத்தனையோ படிகளைத் தாண்ட வேண்டும்; எவ்வளவோ பயிற்சிகளைப் பெற்றிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவன் சொல்லுக்கு மதிப்பு உண்டு; செயலுக்குப் பயனுண்டு. ஜவஹர் சிறைசென்றார்; ஒரு முறையா? பலமுறை. "நான் எங்குச் சுற்றிவந்தாலும் சிறையிலேதான் என்னைக் கொண்டுபோய் விடுகிறது'' என்று துக்கத்திலே நகைச்சுவையைப் புகவிட்டுக் கூறவில்லையா? உபவாசம் இருந்தார்; தடியடி பட்டார்; கைகளிலே விலங்கிடப்பெற்று வீதிகளிலே அழைத்துச் செல்லப்பட்டார்; இன்னும் எத்தனையோ அனுபவங்களை யெல்லாம் பெற்றார்; ராஷ்ட்ரபதியானார்.

ஜவஹர் தேசீயக்கண் மட்டும் படைத்தவரல்லர்; உலகக்கண் படைத்தவர். உலகம் உய்வதற்கு இந்தியா சுதந்திரமடைய வேண்டுமென்று இவர் கோருகிறார். இந்தியா ஆள் பலத்திலும் ஆன்ம பலத்திலும் சிறந்தது. இவையிரண்டினையும் ஒழுங்குபடுத்திச் சுதந்திர பாதையிலே விட்டுவிடுவோமானால் உலகத்திலே பரவியுள்ள அடிமைத்தனம், வறுமை, அஞ்ஞானம் முதலிய யாவும் அற்றுவீழும் என்பது நிச்சயம். ஆனால் இந்தச் செயற்கரும் செயலைச் செய்ய யாருக்குத் திறலுண்டு?

ராஷ்ட்ரபதி ஜவஹருக்குத்தான். இந்தச் சூட்சுமம் காந்திக்குத் தெரிந்திருந்தது.

சத்துருக்களையும் பணியவைக்கும் ஆற்றல் எவனுக்கு உண்டோ அவன்தான் உண்மையான வீரன். உண்மையான தலைவன். இந்த அபூர்வமான சக்தி ஜவஹரிடத்திலே இருக்கிறது. இந்தச் சக்தி நிரம்பப் பெற்றுள்ள காந்தி இதனை உணர்ந்தார். ஜவஹரை ராஷ்ட்ரபதியாக்கினுர். தலைவனுக்கன்றோ தலைவனின் லட்சணம் தெரியும்?

"தலைவர்களா யிருப்போர்க்கு எப்பொழுதும் போராட்டந்தான். முன்னே செல்வோரை இழுத்துப் பிடிக்கவேண்டும். பின்னே வருவோரை இழுத்துக் கொண்டு போகவேண்டும்" என்று ருஷ்யாவின் சர்வாதிகாரியாயிருந்த ஸ்டாலின் கூறினுன். ஜவஹர், இந்த இரண்டு அரிய செயல்களைச் செய்வதோடு, பக்கத்திலே வருவோரைத் தட்டிக் கொடுத்துக் கொண்டும் போகிருர். ராஷ்ட்ரபதியாகவே இவர் பிறந்தார் என்பதில் என்ன சந்தேகம்?

ஜவஹர் ராஷ்ட்ரபதியாகி விட்டார். மன்னுபுகழ் ஸ்வரூப ராணியின் மணி வயிறு வாய்த்த மதலை கொடி தூக்கி விட்டார். பாரதமாதா கண்திறந்து பார்க்கிருள். "ஆடுவோமே பள்ளு பாடுவோமே; ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று" நாமும் பாரதியாருடன் சேர்ந்து கொள்ளலாமா?

## 6. ஜவஹர் *

ஆசீர்வாதம் செய்தவருக்கு நன்றி செலுத்துவது நமது பரம்பரைத் தருமம். அந்த முறையில் பண்டித ஜவஹர்லால் நேருவின் நல்லாசி பெற்றுத் தோன்றிய "ஜோதி" இன்று ஒரு வருஷக் குழந்தையாகி, சுவர் பிடித்து நடக்கிற நிலையில் ஜவஹரின் அருள் நிறைந்த முகத்தை நோக்குகிறது; அவருடைய உலக திருஷ்டியிலே தானும் பார்க்க முயல்கிறது. மற்றவர்களுடைய பார்வையும் இப்பொழுதுதான் இந்தக் குழந்தையின்மீது விழ ஆரம்பித்திருக்கிறது.

"ஜோதி" யின் உதய காலத்தில் ஜவஹர் ராஷ்ட்ரபதியாக இருந்தார். இன்று அவர் விசுவ மேடையில் வீரனுகத் திகழ்கிருர். அதைக் கண்டு "ஜோதி" எவ்வளவு ஆனந்தப்படுகிறது!

ஜவஹர் இப்பொழுது மேலநாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிருர். பிரதிநிதித்துவப் பதவியோ, அதிகார அந்தஸ்தோ ஒன்றும் அவருக்கு இல்லை. பாமர ஜனங்களிடத்திலே பிரமிப்பைக் கொடுக்கக்கூடிய தீர்க்கதரிசி அல்லது மகாத்மா முதலான பெயர்கள் அவருக்கு முன்னுல் கட்டியங் கூறிக் கொண்டு செல்லவில்லை. ஆனுலும், ஜவஹருக்கு மேலை நாடுகளிலே நடைபெற்று வருகிற உபசாரங்கள், முடியணிந்த மன்னர்களும் பொருமைப்படத் தக்கவையாயிருக்கின்றன. மன்னர்கள் பெறுகிற உபசாரம், ஏதோ ஒருவிதமான தூண்டுதலை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கும். ஆனுல் ஜவஹருக்கு,

---

* "ஜோதி" பத்திரிகையின் 1938-ஆம் வருஷம் ஜூலை மாத இதழில் வெளிவந்த தலையங்கம்.

மேலே நாட்டு அரசியல் தலைவர்களும் பிறரும் காட்டுகிற மரியாதைகள், செலுத்துகிற அன்புக் காணிக்கைகள் யாவும் அவர்களுடைய உள்ளத்தின் அஸ்திவாரத்தினின்று தோன்றியவை. ஜவஹரை ஒரு தனி மனிதர் என்ற முறையில்தான் இவர்கள் போற்றுகிருர்கள். இது பெரிய விசேஷம். யாருக்குமே, இதற்குமுன் இத்தகைய பெருமை ஏற்பட்டதில்லை. இந்தப் பெருமை இந்தியாவையும் சேர்ந்தது. ஜவஹரின் இந்த வருஷத்து மேலே நாட்டுப் பிரயாணத்தினுல் இந்தியாவின் அந்தஸ்து, விசுவ திருஷ்டியில், ஒரு படி உயர்ந்திருக்கிறதென்பதை நாம் நினைக்கிறபோது, நாமும் ஒரு படி உயர்ந்திருப்பதாகிற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது.

ஜவஹர் இப்பொழுது மேலே நாடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்வதன் நோக்கமென்ன ? ஓய்வுகொள்ளவா ? உல்லாச யாத்திரைதானு ? அல்லது தன் அருமை மகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலா ? தமது அரசியல் நண்பர்களைச் சந்திக்கவா ? இந்த மாதிரியான ஊகங்களுக்கெல்லாம் ஜவஹர் இடமே கொடுக்கவில்லை. **2-6-1938**-ல் பம்பாயினின்று புறப்பட்டபோது, இவர் பாரத தேசத்திற்குப் பின்வரும் செய்தியை விடுத்தார் :—

> " நான் ஒரு நோக்கத்திற்காக ஐரோப்பா செல்கிறேன். ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ், கூடுமானுல் ருஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு, சில மாதங்களில் திரும்பிவர உத்தேசித்திருக்கிறேன். முப்பத்தைந்து கோடி மக்களைக் கொண்ட நமது தேசம், சுதந்திரத்திற்காக இருப்பதா இறப்பதா என்ற ஒரு பெரிய போராட்டத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாக இறங்கியிருக்கிறது.

நமது ஜனங்கள், தங்களுடைய பிறப்புரிமை யாகிற சுயராஜ்யத்தைப் பெறத் தீர்மானித் திருக்கிறார்கள். காங்கிரஸ் வலுத்துக்கொண்டு வருவதற்கு இந்த உறுதிதான் காரணம். பாரததேச வாசிகள், இந்திய தேசீயக் கொடியை எப்பொழுதும் பறக்கவிட்டுக் கொண்டிருப்பார்கள் என்று நான் பூரணமாக நம்புகிறேன். எப்பொழுதையும்விட இப் பொழுது சுயராஜ்யம் நமக்கு மிகவும் நெருங்கி யிருக்கிறது. ஆகையால் நமது போராட்டத் தைப் பலப்படுத்துவோமாக."

இவர் குறிப்பிடுகிற நோக்கம் எது? இதை இவர் இதுவரையில் தெளிவாகக் கூறினாரில்லை. சர்வதேச நிலைமைகளை அறிந்து, அவற்றோடு இந்தியா எவ் விதத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று நிர்ணயித் துக் கொள்வதே தமது நோக்கமென்று ஓரிடத்தில் இவர் கூறியிருப்பது உண்மையே. ஆனால் அதற் காக இவர் இவ்வளவு சிரமமான சுற்றுப் பிரயா ணத்தை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்.

உருட்டலும் மிரட்டலும் நிறைந்த ஐரோப்பிய அரசியல் நிலையோடு இந்தியா தன்னை எப்படிப் பொருத்திப் பார்த்துக்கொள்ள முடியும்? ஒருவர் முதுகை ஒருவர் சொரிந்து கொள்கிறமாதிரி அமைந் திருக்கிற ஹிட்லர்—முஸோலினி புகழுரைகளை நாம் சிறிது துருவிப் பார்க்கும்போது, ஐரோப்பா கண்டத் தில் தெய்விக ரோம ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்து அதற்கு இரண்டு தூண்களாகத் தாங்கள் அமைந்து விட வேண்டுமென்ற எண்ணம் மேற்படி இரண்டு சர்வாதிகாரிகளிடத்திலும் குடிகொண்டிருப்பதை நன் றாகக் காண்கிறோம். எந்த நிமிஷத்திலும் ஐரோப்பாவில் யுத்தம் ஏற்படலாம். இதை பண்டித ஜவஹர் தமது பாரிஸ் ரேடியோ பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படி யுத்தம் ஏற்படுமானுல், இந்தியாவின் நிலைமை யென்ன ? கடமை என்ன ? இந்த நிலைமையை யும் கடமையையும் தெளிந்து கொண்டு வருவதே இவருடைய சுற்றுப் பிரயாணத்தின் நோக்கம் என்று ஊகிக்கிறோம். ஏனென்ருல், இந்தத் தெளிவு ஏற்பட்ட பின்னர்தான், நமது வருங்காலப் போராட்டத்தை எந்த முறையில் வகுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நிர்ணயித்துக் கொள்ள முடியும். தற்போதைய ராஷ்ட்ரபதியான ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ், அடிக்கடி தமது பிரசங்கங்களில் இந்த வருங்காலப் போராட்டத் தைப் பற்றிக் குறிப்பிடுகிருர். இந்தப் போராட்டம் என்ன, அஃது எத்தகையதாயிருக்கும் என்பதைப்பற்றி யாருமே இன்னும் குறிப்பிடவில்லை. இதை நிர்ணயிக் கவே பண்டித ஜவஹர் மேலை நாட்டுப் பிரயாணத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

அடுத்த போராட்டத்திற்குக் காந்தியடிகள் தலை வராயிருப்பாரா, அல்லது பண்டித ஜவஹர்லால் இருப் பாரா என்பதை இப்பொழுது நாம் துணிந்து கூற முடி யாது. தேசத்தின் ஜனசக்தியானது யாருடைய தலை மையை நாடிச் செல்கிறதென்பதை நாம் இதுகாலை ஒருவாறு ஊகித்தறிய முடிகிறதாயினும், அதை இப் பொழுதே பகிரங்கமாகச் சொல்லிவிட நாம் விரும்ப வில்லை. ஆனுல் ஒன்று மட்டும் நாம் நிச்சயமாகக் கூற முடியும். எந்தவிதமான போராட்டம் நடந்தா லும், அஃது யாருடைய தலைமையில் நடந்தாலும், அஃது அஹிம்ஸா தர்மத்தையும் சத்தியத்தையும் அடிப் படையாகக் கொண்டிருக்கும். அப்படி நடை பெறுகிற போராட்டம் கடைசி போராட்டமாகவும் வெற்றி தருவ தாகவும் இருக்கும்.

---

இந்நூலாசிரியரின்

# நாடும் மொழியும்

மொழிப் பற்றென்றும் நாட்டுப் பற்றென்றும் நிறையப் பேசுகின்றோம். ஆனால் இவற்றின் உட்கருத்தைச் செவ்வனே அறிந்து கொண்டிருக்கிறோமா? என்பதை அறிவிப்பதே இந்த நூல். இதில் 1. தேசபக்தி. 2. பாஷை. 3. தமிழ்நாடு. 4. இன்றைய தேவை ஆழ்ந்த நூலா? நீண்ட நூலா? 5. காவியும் நாடும் என்று ஐந்து கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன.

விலை: ரூ. 1—50 ந. பை.

தபாற் செலவு தனி

**பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்**

புதுக்கோட்டை

இந்நூலாசிரியரின்

# காந்தி யார்?

4917.
XXV.B.5.

காந்தி யார்? இவர் ஒரு வசீகர சக்தி; ஆழ்ந்த அஸ்திவாரமுடைய ஸ்தாபனம்; எல்லா மதங்களும் ஒன்று கூடும் தனி மதம். ஆனால் இவரை ஒரு தெய்வமாக வழிபட்டு நின்றுவிடுவதோடு நாம் திருப்தியடையலாமா? இல்லை, இவர் வாழ்க்கை நமது தினசரி வாழ்க்கையில் ஐக்கியமாக வேண்டும். இதற்குத் துணை செய்வது இந்த நூல்.

காந்தியடிகளின் பலவித தோற்றங்கள், மேல் அட்டையிலுள்ளதோடு சேர்த்து பத்து ஆப்டோன் படங்கள் இந்த நூலை அலங்கரிக்கின்றன.

விலை: ரு. 1-50 ந. பை.

(தபாற் செலவு தனி)

**பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்**
**புதுக்கோட்டை**

பிரபஞ்ச ஜோதி பிரிண்டிங் சர்வீஸ், புதுக்கோட்டை.